பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 11 வெள்ளிக்கிழமை (25-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 150

## உணவுவிடுதி, புளொட் அலுவலகம் மீது நகரில் நேற்றிரவு கிரனேட்டுகள் வீச்சு!

### அவை வெடிக்காததால் சேதங்கள் இல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்நகரில் வேம்படி வீதி - ஆஸ்பத்திரி வீதி சந்தியில் அமைந்துள்ள உணவு விடுதி ஒன்றின் மீதும் அருகே உள்ள புளொட் அமைப்பின் அலுவலகம் மீதும் நேற்றிரவு கிரனேட்டுகள் வீசப்பட்டன. எனினும் அவை வெடிக்காததால் சேதங்கள் ஏற்படவில்லை.

ஆஸ்பத்திரிவீதிச்சந்தியில் ஈ.பி. ஆர்.எல்.எவ். வரதர் அணியினரால நடத்தப்படுவதாகக் கூறப்படும் உணவு விடுதிமீது நேற்று இரவு 9.30 மணியளவில் முதலாவது கிரனேட் வீசப்பட்டது.

வீதியால் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்தவர்கள் கிரனேட்டை உணவு விடுதிக்குள் வீசிவிட்டு ஓடித் தப்பினர் என்று ஈ.பி. ஆர்.எல்.எவ். வட்டாரங்கள் தெரிவித்தன. கிரனேட் வீசப்பட்டபோது உணவு விடுதியினுள் பலர் உணவருந்திக் கொண்டிருந்தனர். கிரனேட் வெடிக்காததால் அங்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க)




நகரிலுள்ள புளொட் அலுவலகத்தையும் அங்கு வீசப்பட்ட கிரனேட்டையும் படத்தில் காணலாம்.
(படம்: பதிமராஜ்)

## போர் இனி என்றுமே வேண்டாம்

# பேச்சுக்களைத் தொடருங்கள்! பேசுவதை செயற்படுத்துங்கள்!!

## அரசு - புலிகள் இருதரப்பிடமும் யாழ். ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.25

**யுத்தம் இனி என்றுமே வேண்டாம். சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துங்கள், பேசுவதை செயலில் நிறைவேற்றுங்கள்.**

**- இவ்வாறு அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.**

அரசுத் தலைமைக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் நேற்று அனுப்பிய அவசர கடிதங்களிலேயே ஆயர் தனது இந்த வேண்டுகோளை முன்வைத்திருக்கிறார்.

ஆயரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(14 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். ஆயர்

## நோர்வே பிரதிநிதிகள் ஆயரைச் சந்தித்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.25

நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் இருவர் நேற்று யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளைச் சந்தித்தனர்.

அமைதிப் பேச்சுக்கள் முன்நகர முடியாத இக்கட்டானநிலை ஏற்பட்டிருப்பது குறித்து அவர்கள் ஆயருடன் கலந்துரையாடினர்.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் குழப்பம், மீண்டும் போர் மூண்டால் மக்கள் எதிர்கொள்ளக்கூடிய துன்ப, துயரங்கள் பற்றியும் சுட்டிக்காட்டிய ஆயர், இனி என்றுமே யுத்தம் ஏற்படாதவாறு பேச்சுக்கள் உறுதியாக முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுத்தினர்.

நோர்வே அரசுப் பிரதிநிதியான ஹானோரொஸ்லிங்ஜென்ஸன் மற்றும் நோர்வே தூதரக அதிகாரி ஆகிய இருவருமே ஆயரைச் சந்தித்தனர்.

(ஐ)

## இவ்வார இறுதிக்குள் புலிகளுக்கு பிரதமமந்திரியின் பதில் கடிதம்

கொழும்பு,ஏப்.25

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திற்கான பதில் இவ்வார இறுதிக்குள் அனுப்பிவைக்கப்படும்.

செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போது அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### சந்தேகத்திற்குரிய படகைத் தேடி

## பொத்துவில் கடற்பரப்பில் வேவுவிமானம் நோட்டம்

கொழும்பு,ஏப்.25

கிழக்குக் கடலில் பொத்துவிலுக்கு அப்பால் 10 கடல் மைல் தொலைவில் சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்றின் நடமாட்டம் பற்றி தகவல் கிடைத்ததை அடுத்து கடலில் நேற்று தேடுதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

சந்தேகத்துக்கிடமான படகு குறித்து தகவல் கிடைத்ததும் அந்தப் படகைக் கண்காணிப்பதற்காக வேவு விமானம் ஒன்று அனுப்பப்பட்டு தவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் -

கண்காணிக்கப்பட்ட கடற்பிரதேசத்தில் சர்வதேச கடற்பரப்பில் வெளிநாட்டு வர்த்தகக் கப்பல் ஒன்று சென்றுகொண்டிருந்ததை மட்டுமே அவதானிக்க முடிந்தது என்றும் -

நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

**பாலசிங்கம் கூறும் உள்ளக சுயநிர்ணய உரிமை உலகில் எங்குமே இல்லாத புதிய ஆட்சிமுறை**

**- ஜனாதிபதி உதயனுக்கு அளித்த பேட்டியின் முழு விவரம் 11ஆம் பக்கத்தில்.**

## புலிகளுடனான பேச்சுக்கு இடையூறுகள் ஏற்படலாம்; அவற்றை வென்று, சமாதான முயற்சியை தொடருவேன்

### அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர்

கொழும்பு,ஏப்.25

இருபது ஆண்டுகளாக ஆயுதமேந்திப் போர் புரிந்த ஒரு குழுவுடன் பேச்சு நடத்தும்பொழுது பலதரப்பட்ட இடையூறுகள் ஏற்படமுடியும். இருப்பினும் அந்த இடையூறுகளை வெற்றிகொண்டு, சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நடைபெற்ற பூர்வாங்க அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் எழுந்த கடல் எல்லை சம்பந்தமான சிக்கல் அவ்வாறான ஒரு தடங்கல் எனவும் குறிப்பிட்ட பிரதமர், சமாதானப் பேச்சுக்களைப் போன்று அரசிக்கலும் பேச்சுமூலம் தீர்க்கப்படவேண்டும் எனவும் கூறினார்.

பிரதமர் அக்கூட்டத்தில் மேலும் கூறியிருப்பதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற காலத்தைப்போன்று அண்மைக்காலத்திலும் சில அரசியல் கட்சிகள், பலதரப்பட்ட குழுக்கள், சில ஊடகவியலாளர்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தினர். அப்பிரச்சினைகளைக் கண்டு கலங்காது முன்னேறிச் செல்வதே செய்யவேண்டியதாகும்.

இந்நாட்டின் முன்னணி தேசிய சிங்கள தினசரிப் பத்திரிகை ஒன்று இந்நாள்களில் இனவெறித் தனமாக பொய்ச் செய்திகளை வெளியிட்டு

(14 ஆம் பக்கம் பார்க்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% வருடாந்த வட்டியை மாதாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB


உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# வெளிநாட்டு உதவிகளை கையாள்வதில் புலிகளுக்கு முக்கிய பங்கு இருக்கிறது

## அவர்களைப் புறக்கணிக்கமுடியாது என்கிறார் சந்திரசேகரன்

கிளிநொச்சி,ஏப்.25

விடுதலைப் புலிகள் அதிக விட்டுக் கொடுப்புடன் யுத்த நிறுத்தம் செய்து சமாதான முயற்சிகளில் இறங்கியதன் விளைவாகவே இலங்கைக்கு கூடுத



லான வெளிநாட்டு உதவிகள் கிடைக்க ஆரம்பித்துள்ளன. இதில் புலிகளின் பங்கு, பணி பிரதானமானது; எனவே, வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் பொறுப்பு புலிகளுக்கும் இருக்கிறது. இதில் அவர்களைப் புறக்கணிக்க முடியாது என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரும் மலைய மக்கள் முன்னணியின் தலைவருமான பெரியசாமி சந்திரசேகரன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக கிளிநொச்சிக்கு வந்திருக்கும் அவர் நேற்று அங்கு வைத்து உதயன் அலுவலகச் செய்தியாளருக்குப் பேட்டி அளித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:-

தற்போது சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பதற்கு கூறப்படுகின்ற காரணம், நியாயமானது என்பதை நாங்கள் பிரதமரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

முக்கியமாக யுத்தநிறுத்தத்துக்குப் பிறகு வெளிநாட்டு உதவிகள் பெருமளவில் இலங்கைக்கு கிடைக்க ஆரம்பித்திருக்கின்றன. இந்த வெளிநாட்டு உதவிகள் எந்தளவுக்கு வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்குப் பயனடைவது என்பதைப் பற்றித் தீர்மானிக்கின்ற பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருக்கவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். காரணம், வெளிநாட்டு உதவிகள் வெறுமனே அரசிடம் கையளிக்கப்பட்டால், அந்தப் பணத்தை வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள், அரசிடம் கையேந்த வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுவிடலாம். ஆகவே, இது அசாதாரணமான ஒரு நிலைமை. இன்றைக்கு யுத்தநிறுத்தம் ஏற்பட்டமையாலேயே வெளிநாட்டு உதவிகள பெருமளவில் கிடைக்கின்றன. யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மிகுந்த விட்டுக்கொடுப்போடு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தளவுக்கு அரசோடு அவர்கள் ஒத்துழைக்கிறார்கள். அதைப்போல பிரதமர் ரணிலும் இன்னொரு யுத்தத்துக்கு தாம் தயாரில்லை என்பதை பகிரங்கமாக மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். இந்தச் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தாலும் கூட திரும்பவும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு வழி இருக்கிறதா எனப் பார்க்கவேண்டும் என்று அவர் வலியுறுத்திக்கொண்டிருக்கிறார். ஆகவே, இரண்டு தரப்பினரும் விட்டுகொடுப்புக்களோடு இருக்கின்றபொழுது, சுமார் 15 வருடங்களுக்கு மேலாக யுத்தம் செய்த, யுத்தத்தினால் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சம்பந்தமில்லாமல் எந்தவிதமான அபிவிருத்திக்கான நிதிகளும் பெறப்படுவது முறையற்றது. அது இன்னொரு இன ஒதுக்கலாக ஆகிவிடும் என்பதை நாங்கள் பிரதமரிடம் தெரிவித்திருக்கிறோம். அதற்குப பிரதமர் தெரிவித்த ஒரே கருத்து 'உபகுழு' ஒன்றை ஏற்படுத்துவோம். அந்த உபகுழுவிலே விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களையும் இணைத்துக் கொள்வோம். அதன்மூலம் அந்தப் பிரதேச அபிவிருத்தியை நாங்கள் உறுதிசெய்வோம் என்று சொல்லியிருக்கின்றார்.

இது வெறுமனே முதல் முறையாக நாங்கள் நடத்துகின்ற பேச்சுக்களே தவிர இதில் எந்த முடிவும் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனுடைய கருத்தை அரசுக்கும் தேசிய ரீதியிலே சகல மக்களுக்கும் கொண்டு செல்லுகின்ற ஒரு முயற்சியாகவே இதனை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். புலிகள் சொல்லுகின்ற கருத்துக்களை அரசிடம் கூறி, அவர்கள் சொல்லுகின்ற பதிலை மீண்டும் புலிகளிடம் கூறுவதே எமது நோக்கம்.

★*கேள்வி:* பிரதமர் கூறுகின்ற உபகுழு எந்தவிதமாக அமையும்?

✪*பதில்:* இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து கிடைக்கின்ற உதவிகளை எந்த, எந்தப் பிரதேசத்துக்கு, என்னென்ன தேவைக்கு, எந்த அளவில் பயன்படுத்தவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கான ஓர் உபகுழு. அந்த உபகுழுவிலே விடுதலைப் புலிகளையும் இணைத்துக்கொள்வதாக பிரதமர் ரணில் எங்களிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

★*கேள்வி:* நீங்கள் பிரதமரின் விசேட பிரதிநிதியாக அதாவது அவரது வேண்டுகோளின் பேரிலா வருகைதந்துள்ளீர்கள்?

✪*பதில்:* நான் இலங்கை அரசின் பிரதிநிதியாகவோ அல்லது பிரதமரின் பிரதிநிதியாகவோ இங்கு வருகைதரவில்லை. என்னைப் பொறுத்த வரையில், ஆரம்பத்திலிருந்து வடக்கு - கிழக்கு மக்களுடைய போராட்டம் காலத்தின் நிர்ப்பந்தம் என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறேன். ஆகவே, இன்னொரு யுத்தம் ஏற்படுமாக இருந்தால் என்னுடைய அரசியல் நிலைப்பாட்டை தீர்மானிக்கவேண்டிய தேவை எனக்கு இருக்கிறது. ஆகவே, எனக்கு அரசோடும் பேசவேண்டும். அதே போல விடுதலைப் புலிகளோடும் பேசவேண்டும். அதன் மூலம் நான் ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அந்த நோகத்தோடுதான் நான் வந்திருக்கிறேன்.

★*கேள்வி:* புலிகள் மீண்டும் பேசசுக்களில் பங்குபற்றவேண்டும் என்பதனை நீங்கள் வலியுறுத்துவீர்களா?

✪*பதில்:* நிச்சயமாக, நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன் மீண்டும் ஒரு யுத்தத்துக்கு நாங்கள் போகக் கூடாது. இப்போது, சமாதானப் பேச்சுகள் ஆரம்பமான பின்னர், முழு இலங்கையிலும் வாழ்கின்ற சகல தமிழ் மக்களும் அணிதிரளுகின்ற ஓர் அருமையான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடக்கூடாது. ஒரு தொகுதியிலும் கூட தனியாகப் போட்டியிட்டு வெல்லமுடியாத ஜே.வி.பியினர் 14 பேர் இன்றைக்கு நாடாளுமன்றம் வந்திருக்கிறார்கள். அவர்கள் அரசையும், தேசியக் கட்சியையும் அச்சுறுத்துகின்ற அரசியல் பலத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், மலையகத்திலே, கொழும்பிலே, வடக்கு - கிழக்கிலே வாழ்கின்ற தமிழர்களாகிய நாம் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே அரசியல் சக்தியாக உருமாறினால் - நாடாளுமன்றிலே நாற்பதுக்கும் அதிகமான ஆசனங்களை பெறமுடியும். அப்படிப் பெற்றால் நமது பலம் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற ஒன்றாக ஆகிவிடும். அதற்கான அடித்தளத்தை இடவேண்டும் என்பதுதான் மலையக மக்கள் முன்னணியின் பிரதான நோக்கமாகும்.

★*கேள்வி:* புலிகளுடனான உங்கள் பேச்சின் விளைவுகளை நீங்கள் பிரதமருடன் கலந்து ஆலோசிப்பீர்களா?

✪*பதில்:* தற்போது இருக்கின்ற அரசியல் நிலைமைகள் தொடர்பாக பிரதமரை சந்தித்தபோது வலியுறுத்தினோம் அதேநேரம் அன்ரன் பாலசிங்கம் தனதுகடிதத்தில் கூறியுள்ள அத்தனை கருத்துக்களும் நியாயப்படுத்தக்கூடியவையே! நிராகரிக்கப்படக்கூடியவைகள் அல்ல என்பதையும் தெரிவித்திருக்கிறோம். நான் இதனை தனிப்பட்ட விஜயமாக மேற்கொண்டாலும் கூட, இங்கு சொல்லப்படுகின்ற கருத்துக்களை அரசுக்கு மட்டுமல்ல, வெளியுலகத்துக்கும் கொண்டு செல்வதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம்.

★*கேள்வி:* ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை - யுத்தநிறுத்த உடன்படிக்கையிலே கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே அடுத்தகட்டப் பேச்சுக்களுக்குப் புலிகள் செல்வார்கள் எனக்கூறப்பட்டுள்ளது. ஆக, அந்த உடன்படிக்கை விடயங்கள் பூரணமாக அரசால் அமுல்படுத்தப்படுவதற்கு தங்களின் அழுத்தம் அரசுக்கு இருக்குமா?

✪*பதில்:* புரிந்துணர்வு உடன்படிக்கையைப் பொறுத்தவரையில் என்ன உடன்பாட்டிற்கு அரசும் புலிகளும் வந்திருக்கின்றார்களோ, அதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதிலே நாம் உறுதியாக இருப்போம். என்னைப் பொறுத்தவரையில் மலையக மக்கள் முன்னணியின் கட்சித் தலைவர் என்பதை மறந்து, மலையக மக்களுடைய பிரதிநிதி என்பதை மறந்து, முழு இலங்கையிலும் வாழுகின்ற தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கின்ற ஒரு தேவை இருக்கிறது. அந்த ரீதியிலே இந்த உடன்படிக்கை எங்காவது மீறப்பட்டால், நிச்சயமாக அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

(ஐ-1)



மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன், அமைச்சின் செயலாளர் அன்பரசு, ஊடகச் செயலாளர் பிரபா ஆகியோரும் வந்திருந்தனர். அவர்களைப் படத்தில் காணலாம். *(படம் -தேவராஜன்)*

# தமிழர் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்த புலிகள் பேச்சில் பங்குபற்ற வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் வில்ஸ் கூறுகின்றார்

கொழும்பு,ஏப்.25

தமிழர் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்த புலிகள் பேச்சில் பங்குபற்ற வேண்டும். அதிலிருந்து வெளிநடப்பு செய்யக்கூடாது என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் கூறுகின்றார்.

சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தியிருப்பது குறித்து கருத்து தெரிவித்திருக்கும் தூதுவர் வில்ஸ் மேலும் கூறியிருப்பதாவது:-

புலிகளின் முடிவு எமக்கு கவலையைத் தருகின்றது. பாலசிங்கத்தின் கடிதத்தில் கூறப்பட்டுள்ள காரணங்கள் எம்மால் ஏற்றுக்கொள்ளக் கூடியனவல்ல.

உண்மையில் அமைதியான அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் உறுதியிருக்குமானால் அந்தத்தரப்பு தனது மனக்குறைகளை பேச்சு மேசையிலேயே தீர்த்துக்கொள்ளவேண்டும். அதன் அர்த்தம், சில விடயங்கள் தொடர்பாக தமிழர்களின் மனக்குறைகள் எனக்குப் புரியவில்லை என்பது அல்ல.

உயர் பாதுகாப்பு வலயம் மீள் குடியமர்வு, அபிவிருத்தி போன்ற விடயங்கள் பேச்சின் மூலமே அணுகப்படவேண்டும்.

தமிழர் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்த புலிகள் விரும்பினால் அவர்கள் பேச்சில் பங்குபற்ற வேண்டும். அதிலிருந்து வெளிநடப்பு செய்யக் கூடாது.

தமது முடிவை மீளாய்வு செய்து பேச்சு வழிக்குத் திரும்புமாறு நாம் புலிகளைக் கோருகின்றோம். பேச்சு இடைநிறுத்தப்பட்டிருக்கும் போது யுத்த நிறுத்த ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கும் படி அரசைக்கோருகிறோம்.

பேச்சுக்கு திரும்புவதற்கான உறுதியை மீண்டும் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்துக்குரிய நல்ல காலமாக இந்த இடைவேளையை இரு தரப்பும் பயன்படுத்த முடியும். முறையாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் இந்த யுத்த நிறுத்தத்தை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்.

அந்தக் குறைபாட்டுக்கு அரசு மீது புலிகள் குற்றம் சுமத்தினாலும் அரசு மட்டும் அதற்கு காரணமாகாது. பல எண்ணிக்கையான யுத்த நிறுத்த மீறல்களுக்குப் புலிகளும் பொறுப்பு. தங்களின் அத்துமீறல்களை மீளாய்வு செய்யும்படி புலிகளைக் கோருகின்றோம்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் பெரும் எதிர்பார்ப்புகள் உள்ளன என்று நான் நினைக்கிறேன். பொருளாதார அபிவிருத்திக்காலம் செல்லுமென்பதை இலங்கையர் உணரவேண்டும். நிரந்தர சமாதான சூழ்நிலை இன்னமும் இலங்கையில் ஏற்படவில்லை பொருளாதாரப் புதுமை இப்பொழுது ஏற்படவேண்டுமென இலங்கையில் சிலர் எதிர்பார்க்கின்றனர் என நான் எண்ணுகிறேன். ரோம் ஒருநாளில் கட்டப்படவில்லை நாம் விரும்புவதுபோல கிளிநொச்சியையோ, திருமலையையோ, அம்பாந்தோட்டையையோ விரைவில் அபிவிருத்தி செய்துவிட முடியாது.

உதவி வழங்கும் சகல நாடுகள் சார்பிலும் நான் பேசவில்லை. ஆயினும், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பல திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பது எனது நினைப்பாகும்.

பெருமளவு அழிவுகள் ஏற்பட்ட காரணத்தால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அபிவிருத்தி குன்றிய பகுதிகளுக்கு உதவியளிக்கும் நாடுகளின் பணம் சென்றடைய வேண்டும் என்பதையே அந்நாடுகள் விரும்பும். ஆயினும் தெற்கிலுள்ள பகுதிகளுக்கும் அப்பணம் செல்ல வேண்டும்.

இலங்கையின் முன்னைய அரசுகளின் தவறான நிர்வாகம் மட்டுமே தென்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# 'சிரான்' கூட்டமும் ஒத்திவைப்பு

## அரசுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

இன்றும் நாளையும் கிளிநொச்சியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு (சிரான்) கூட்டத்தை ஒத்திவைப்பதாக புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரும் சிரானில் இடம்பெறும் புலிகள் குழுத் தலைவருமான சு.ப.தமிழ்ச்செல்வன் அரச குழுத் தலைவரான பேர்னாட் குணதிலகவுக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

சிரானின் அடுத்த கூட்டத்துக்கான திகதியை நிர்ணயிப்பதற்கு முன்னர் அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுமாறு தமிழ்ச்செல்வன் கோரிக்கையும் விடுத்திருக்கிறார்.

அரசுடனான சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்த விடுதலைப் புலிகள் கடந்த திங்களன்று மேற்கொண்ட தீர்மானத்தின்படியே 'சிரான்' கூட்டத்திலும் பங்குகொள்வதில்லை என்ற இத்தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கடந்தகால 'சிரான்' கூட்டங்களில் மனிதாபிமான வாழ்வுத்திட்டங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கும் தமிழ்ச்செல்வன், அந்த உபகுழுவின் கூட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்குமுன், முன்னைய தீர்மானங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வுகள் வழங்கப்படவேண்டும் எனக் கோரியிருக்கிறார். 'சிரான்' கூட்டத்தில் பங்குபற்றாதிருக்க விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தீர்மானம் குறித்து ஜப்பானின் தூதுவர் செய்ஷிரோ ஒட்சுகா, நோர்வேயின் புதிய தூதுவர் ஹன்ஸ பிரட்சா ஆகியோருக்கும் தமிழ்ச்செல்வன் அறிவித்திருக்கிறார்.

'சிரான்' கூட்டத்தை ஒத்திவைக்க நேர்ந்தது குறித்து தமிழ்ச்செல்வன் அனுப்பியிருக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:- சமாதானப் பேச்சுகளில் பங்குபற்றுவதை இடைநிறுத்த விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய 'சிரான்' கூட்டத்தை ஒத்திவைக்க கவலையுடன் முடிவுசெய்திருக்கிறோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்தில் எழுப்பப்பட்ட அவசர விடயங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, அமுல்படுத்தப்படுவதைக்காண எமது தலைமைப்பீடம் விரும்புகிறது. 'சிரான்' அடுத்த கூட்டத்துக்கான திகதி அதன்பின்னரே தீர்மானிக்கப்படும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களும் அகதிகளும் மீண்டும் குடியமர்த்தப்படவும் புனர்வாழ்வளிக்கப்படவும் அவசர நடவடிக்கை அவசியமானது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

வடக்கு, கிழக்கிலுள்ள மக்களின் கஷ்டங்களைப் போக்க இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்க்கமான, அவசர நடவடிக்கைகள் மூலம் பரஸ்பர நம்பிக்கையும், ஒத்துழைப்பும் மீண்டும் ஏற்படுத்தப்பட முடியும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

இதற்கிடையே, வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியம் மூலம் இனங்காணப்பட்ட திட்டங்களுக்கு ஒஸ்லோ கூட்டத்தில் சர்வதேச நிதியுதவி வழங்கும் நாடுகளினால் உறுதியளிக்கப்பட்ட நிதிகளை அவசரமாகக்கோர இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமெனவும் நாம் நம்புகின்றோம்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (ம)

# உலக சுகாதார ஸ்தாபனம் மீது கனேடிய அரசு கடும் சீற்றம்

ரொரன்ரோ,ஏப்.25

'சார்ஸ் நோய்' அச்சுறுத்தல் உள்ள இடங்களின் பட்டியலில் தனது தலை



நகரையும் உலக சுகாதார ஸ்தாபனம் சேர்த்துக் கொண்டமை குறித்து கனடா கண்டனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சீனத் தலைநகர் பீஜிங் மற்றும் அதன சங்காய் மாநிலம், கனேடியத் தலைநகர் ரொரன்ரோ ஆகியவை 'சார்ஸ்' நோய் அச்சுறுத்தல் உள்ள இடங்கள் என்று அறிவித்திருந்தது. இந்த இடங்களுக்குச் சென்று வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அது தெரிவித்திருந்தது.

இது கனேடிய அரசுக்கு கடும் கோபத்தை வரவழைத்துள்ளது. உண்மைக்குப் புறம்பான ஒரு விடயத்தையே உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது என்று கனேடிய சுகாதார அமைச்சர் ஆன் மக்விலான் தெரிவித்தார்.

'சார்ஸ்'க்கான அறிகுறிகளுடன் 16 பேர் உயிரிழந்துள்ளதாக கனடா அறிவித்திருந்தது. ஆசியாவுக்கு வெளியே இந்த நோய்த் தொற்று காணப்படும் ஒரே மேற்கு நாடு கானடாவாகும்.

ஆனால், தற்போது தனது நாட்டில் 'சார்ஸ்' நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அதனால் அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்றும் கனேடிய அரசு தெரிவிக்கின்றது. (ம)

# இஸ்ரேல் தற்கொலைத் தாக்குதல்: பொலீஸ் உட்பட 2 பேர் உயிரிழப்பு!


## ரயில் நிலையத்தில் சம்பவம்; மேலும் 13 பேர் காயம்

இஸ்ரேலின் மத்திய பகுதி ரயில் நிலையம் ஒன்றில் பலஸ்தீனத் தற்கொலையாளி ஒருவர் நடத்திய தாக்குதலில் அவர் உட்பட இருவர் உயிரிழந்தனர்; 13பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை மக்கள் நெருக்கடி மிகுந்த சமயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ரயில் நிலையத்தின் வாயிலில் வழமையான சோதனையிடத்தில் தற்கொலையாளியை பொலீஸ் கான்ஸ்டபிள் சோதனையிட முயன்ற போது குண்டு வெடித்ததாக இஸ்ரேல் கூறுகின்றது.

கடந்த ஒரு மாதகாலத்தில் இஸ்ரேலின் உட்பகுதியில் நடத்தப்படும் தாக்குதல் இதுவாகும். புதன்கிழமை பலஸ்தீன அமைச்சரவையை புதிதாக மாற்றி அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டதன் பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தற்கொலைத் தாக்குதலால் சிதைந்த கண்ணாடித் துண்டுகளும் உடைந்து சிதறிய கதவுப் பகுதிகளும் மனித உடல் பாகங்களும் ரயில நிலையத்தின் வாசல் பகுதி எங்கும் சிதறிக் காணப்பட்டன.




சம்பவம் இடம பெற்ற கபா சபார் இஸ்ரேலுக்கும் மேற்குக் கரைக்கும் இடைப்பட்ட பகுதியாகும்.

தற்கொலையாளி ரயில் நிலையத்துக்குள் அவசரமாக நுழைய முயன்ற போது அவரை இரு காவலர்கள் வழிமறித்தனர். அவர்களைக் கடந்து தற்கொலையாளி சனக்கூட்டத்தை நோக்கிச் செல்ல முயன்றார். அப்போது ஒரு பொலீஸ் நபர் அவரது கால்களை இழுத்துத் தடுத்தார். அப்போது பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில் தற்கொலையாளியை தடுக்க முயன்ற பொலிஸாரும் உயிரிழந்தார் என்றார் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர்.

# ஐ. நா. ஆயுத சோதனையாளர் ஈராக் செல்ல அனுமதி மறுப்பு!

## அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவிப்பு

நியூயோர்க்,ஏப்.24

ஐ.நா. ஆயுத சோதனை அதிகாரிகளை ஈராக்கிற்குள் அனுமதிக்க இயலாது என்று அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கு முன்னர் அங்கு பணியாற்றிய ஐ.நா. ஆயுத சோதனையாளர்கள் மீண்டும் அங்கு சென்று ஈராக பேரழிவு ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கிறதா என்பதைக் கண்டறியும் தமது சோதனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் கோரி வருகின்றன.

ஈராக் மீது ஐ.நா. விதித்த பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டுமானால் அங்கு பேரழிவு தரும் ஆயுதங்கள் இல்லை என்பதை ஆயுத சோதனையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று அந்த நாடுகள் வலியுறுத்துகின்றன.

ஆனால், ஈராக்கில் போர் முடிவுக்கு வந்துவிட்டதால் உடனடியாகத் தடைகளை அகற்ற வேண்டும் என்று அமெரிக்கா கோருகின்றது.

இத்தகைய இருவேறு பிரச்சினைகளை ஒன்றுபடுத்தும் நிபந்தனைகளை ஏற்க இயலாது என்று அமெரிக்க அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் பிளெய்ச்சர் வாஷிங்ரனில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ம)

# வடகொரியா குறித்த அமெரிக்க கொள்கை மாறியாக வேண்டும்

## அந்த நாடு வலியுறுத்து

வடகொரியாவின் அணுஆயுதப் பிரச்சினை தொடர்பாக சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்றுமுன் தினம் ஆரம்பமான அமெரிக்கா - வடகொரியா - சீனா இடையிலான முத்தரப்புப் பேச்சுக்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தன.

அதேசமயம், வடகொரியா குறித்த தனது கொள்கைகளை - குரோத மனப்பான்மையை - அமெரிக்கா மாற்றிக் கொள்ளவேண்டும். அதுவே பேச்சுக்கள் வெற்றிபெற ஏதுவாக அமையும் என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் செய்தி அறிக்கை ஒன்றில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

அமெரிக்கா ஈராக் மீது தொடுத்த போரானது, மற்றைய நாடுகளும் தமது இறைமையைப் பாதுகாப்பதற்காக சிறந்த படையணிகளை, ஆயுதங்களை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற தேவையை ஏற்படுத்தி உள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

வடகொரியா தொடர்பாகத் தான் கொண்டுள்ள விரோத மனப்பான்மையை அமெரிக்கா மாற்றிக்கொண்டு, அதனைச் செயல் வடிவில் நிரூபித்துக்காட்ட வேண்டும் பேச்சுக்கள் வெற்றிகரமாக அமைய அதுவே தூண்டுகோலாக அமையும் எனகிறது அந்த அறிக்கை. (ம)



குவாண்டனாமாவில் உள்ள கிராமம் ஒன்றில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 10இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்; 8பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த சிறுமி ஒருத்தியின் சடலத்தை மீட்புப் பணியாளர்கள் மீட்கும் காட்சி இது.



'சார்ஸ்' நோயின் தாக்கம் சீனா மற்றும் ஹொங்கொங்கில் மிக அதிகமாகியுள்ளது. சீனத் தலைநகரில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஹொங்கொங்கில் முன்னர் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இப்போது திறக்கப்பட்டுள்ளன. ஆனால், பாடசாலை மாணவர்கள் அனைவரும் 'சார்ஸ்' சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். சுவாசத்துக்கான கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கு வரும் மாணவர்கள் அனைவரது கைகளும் அவர்கள் வகுப்புக்களுக்குள் நுழைவதற்கு முன்னர் மருசாரம் கொண்டு சுத்தமாக்கப்படுகின்றது.

# மேலும் 3 ஈராக் தலைவர்கள் அமெரிக்கப் படையால் கைது

## புலனாய்வுத் துறை தலைவரும் அதில் அடக்கம்

ஈராக்கில் மேலும் மூன்று முக்கிய தலைவர்கள் அமெரிக்கப் படைகளால கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா ஈராக்கில் தேடிவரும் 55 பேரில் 11 பேர் தற்போது அவர்கள்வசம் இருக்கின்றனர்.

தற்போது கைது செய்யப்பட்ட சதாம் ஆதரவாளர்களில் முக்கியமானவர் சதாம் ஆட்சியில் இராணுவ புலனாய்வுத்துறைத் தலைவராக இருந்த ஜெனரல் ஷஹூயர் தலிப் அபு அல்-ஷடர் அல்-நஹிப் என்பவராவார். அமெரிக்கா வெளியிட்ட தேடப்படுவோர் பட்டியலில் 21ஆவது இடத்தில் இருப்பவர் இவர். இவரை அமெரிக்கப் படைகள் கைது செய்யவில்லை. அவர் தானாகவே சரணடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் ஈராக் வான் பாதுகாப்பு படைகளின் முன்னாள் தலைவர் முஸாஹிம் சம் ஹஸான் அல் திக் ரிட், ஈராக்கின் முன்னாள் வர்த்தக அமைச்சர் மொஹமட் மஹ்டி அல்-ஷால்ஷி ஆகியோரும் பக்தாத்தில் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர ஈராக் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரும் அண்மைய நாள்களில் அமெரிக்கப் படையால் கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவால் வெளியிடப்பட்ட 55பேர் கொண்ட தேடப்படுவோர் பட்டியலில் இவரது பெயர் இல்லை.

சரணடைந்துள்ள ஈராக்கிய இராணுவப் புலனாய்வு தலைவர் ஜெனரல் அல்-நஹிப் ஈராக்கிய இராணுவப் படைப்பிரிவுகளைக் கண்காணிப்பவராகவும் இருந்துள்ளார். இராணுவத்தின் ஆயுத தளபாட விவரங்கள் மற்றும் இராணுவத்துக்கு எதிரானவர்களின் விவரங்களையும் இவர் கையாண்டு வந்துள்ளார்.

இவரது கைது அமெரிக்க இராணுவ நடவடிக்கையில் ஒரு முக்கிய கட்டம் என்று கூறப்படுகிறது.

இவர் மூலம் ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் சதாம் மறைந்திருக்கக் கூடிய இடங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளமுடியும் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். சதாமுக்கும் தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையில் தொடர்புகள் இருந்ததாகக் கூறிவரும குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவும் அமெரிக்க அதிகாரிகள் இவரைப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# மற்றைய நகர்வுகள்

★ ஈராக்கில் உள்ள அமெரிக்க படைத்தளபதி அங்கு போர் இன்னும் முடியவில்லை என்று கூறுகிறார். அங்கு பணியாற்ற இதுவரை இல்லாத அளவுக்கு அமெரிக்கப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.



★ ஈராக்கிலிருந்து ஒரு மாதத்துக்கு முன்னர் வெளியேறிய ஐ.நா. சர்வதேச உதவியாளர்களில் ஒரு தொகுதியினர் தற்போது வடக்கு ஈராக்குக்குத் திரும்பியுள்ளனர்.

★ மிக விரைவில் பக்தாத்துக்கான அவசியமான மின்சார விநியோகம் வழங்கப்படும் என அங்குள்ள அமெரிக்கத் துருப்புகள் நம்பிக்கை வெளியிட்டன.

★ வளைகுடாவிலோ வேறு எந்த இடத்திலோ மற்றொரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்தார்.

★ கர்பலாவுக்குப் புனிதப் பயணம் சென்றுவிட்டு பக்தாத் திரும்பி வந்து கொண்டிருந்த ஈராக்கிய ஷியா முஸ்லிம் பிரிவின் பிரபலமான மதத் தலைவரான மொஹமட் அல்-டாட்டுஸி, தான் அமெரிக்கப் படைகளால் தடுக்கப்பட்டு மூளைகேடாக நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

★ ஈராக்கில் மிக விரைவில் புதிய நிர்வாக அலகு ஒன்று ஏற்படுத்தப்படுவதையே தான் விரும்புவதாக அங்கு தங்கியுள்ள ஈராக் சிவில் நிர்வாகத்துக்கான அமெரிக்க நிர்வாகி ஜெனரல் ஜோய் கார்னர் தெரிவித்துள்ளார்.

PRINCE

துருபிடிக்காத
உலோக கிச்சன் சிங்க்

பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு
கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள
ஏனைய கிச்சன் சிங்குகளைவிட
விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## புனர்வாழ்வு அலுவலகத்தில் தனிப்பிரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.செயலகத்தில் உள்ள புனர் வாழ்வு அலுவலகத்தின் வேலைப் பளுவைக் குறைக்கும் வகையில் தனிப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

திட்டங்களைக் கண்காணிக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் இப்பிரிவு செயலகத்தில் தனியான அலுவலகமாக இயங்கவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-10)

## இறை சேர் ஈராண்டின் இதய அலைகள்

கரம்தனில்
07 - 03 - 1920



கடல்தனில்
18 - 04 - 2001

### அமரர் நாகலிங்கம் பொன்னம்பலம்

(முன்னாள் லேக்ஹவுஸ் பத்திரிகை முகவர்)
திதி : 25.04.2003

மனம் எனும் பதிவேட்டில்
புனித நின் வாழ்வியற் கோலத்தை
கனம் குன்றா நிறைவோடு
தினம் ஓங்க நீ வரைந்து
வானகம் ஏகி ஆண்டிரண்டானதோ!
சினம் காணா நின் வதனமும்
சிம்மம் போல் உள வைரமும்
தனம் வேண்டா நின் சிக்கனமும்
கரம் பற்றி உதவும் துணிவும்
இறையகம் ஏகி நாலாறு திங்களானதோ!!
அன்புத் தந்தாய்!!!
புகழ் தந்தாய்! வளம் தந்தாய்!
கல்வியுடன் கலைகளும் தந்தாய்!
கௌரவம் சேர் கட்டுப்பாடு தந்தாய்!
கருவிழி அகலா நின் நிழலையும் தந்தாய்!
மண்ணிலே உன் உருவை ஏன் மறைத்தாய்!
உன் ஆத்மா சாந்திபெறுக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'தேணிக்கரை'
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(17074)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## இராமசாமிப்பிள்ளை நடனசிகாமணி

(கொரனேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,
நியூசிட்டி ஜுவலர்ஸ் பங்குதாரர், திருகோணமலை)

தோற்றம்
29 - 05 -1928

மறைவு
09 - 05 -2002

திதி : 27.04.2003

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற ஐயாவே!
இரு விழி சிந்திய நீர்த்துளிகள் இன்னும் காயவில்லை
அன்பின் அணிகலனாய், பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் குல விளக்காய் வாழ்ந்த ஐயாவே!
எம்மைப் பரிதவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
உறவுகள் மட்டுமல்ல தேசமே தேடுகிறது
மாண்டவர்கள் மீண்டதில்லை என்ற உண்மை
உணர்ந்த பின்னும் ஏங்குகின்றோம் உங்கள் பிரிவால்...
மனங்களில் மறையாத மாவீரருக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளைமறுதினம் (27.04.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(17075)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உதயன்

## புதிய நிபந்தனையா? யார் போடுகின்றார்கள்?

"அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத புதிய நிபந்தனைகளைப் புலிகள் இப்போது விதிக்கின்றார்கள். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல" - இவ்வாறு கூறுகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

"உயர் பாதுகாப்பு வலயங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எந்தப் பகுதியிலும் கூறப்படவில்லை. இடம்பெயர்ந்த அனைவரும் தத்தமது வீடுகளில், பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்றே புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறுகின்றது. ஆனால், புலிகளோ உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும் வரை பொதுமக்களை மீளக்குடியமர அனுமதிக்க மாட்டோம் என்று புதிய நிபந்தனை போடுகின்றார்கள்" - என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவரது இந்தக் கருத்து உயர் பாதுகாப்பு வலயம், நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் தமது பிரதேசங்களில் மீளக்குடியமர்தல் ஆகியவை தொடர்பாக விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வரும் விடயங்களை ஜனாதிபதி தவறாகப் புரிந்துகொண்டுள்ளாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஜனாதிபதி குறிப்பிட்டது போன்று உயர் பாதுகாப்பு வலயங்களையோ, படைமுகாம்களையோ வாபஸ் பெறும்படி புலிகள் கேட்கவில்லை. துருப்பினரை விலக்கும்படியும் அவர்கள் கோரவில்லை.

இது விடயத்தில் அவர்கள் கேட்பதெல்லாம் ஒன்றுதான் நாட்டுக்குள் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் - அமைதி நிலவும் இந்தக் காலத்தில் கூட - சொல்லொணா துன்ப, துயரங்களைத் தொடர்ந்து அனுபவிக்கின்றார்கள். துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்தும் கூட அவர்களுக்கு வழமை நிலை ஏற்படவில்லை. அவர்களது அன்றாட - அத்தியாவசிய - கஷ்டங்களை நீக்குங்கள். அதற்காக அவர்கள் தங்கள் இடங்களில் மீளக் குடியமர அனுமதியுங்கள் - இதுதான் புலிகள் கேட்பது.

- இதைத்தான் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கூறுகின்றது.

- அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் இது குறித்துத்தான் இணக்கமும் காணப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள - நேரடிப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட - இந்த விடயத்தை நடைமுறைப்படுத்துவதைத்தான் புலிகள் வற்புறுத்துகின்றார்கள். "செய்கிறோம், செய்கிறோம்" என்று கூறிக் காலத்தை இழுத்தடிக்காமல் செய்து முடியுங்கள் என்றுதான் புலிகள் வலியுறுத்துகின்றார்கள். அவர்கள் புதிதாக நிபந்தனை எதுவும் போடவில்லை.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற காரணத்தைக் காட்டி மக்களை மீளக்குடியமர விடாமல், காலத்தை இழுத்தடித்து வருவது அரசுதான்.

அதுவும் யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை தாம் விரும்பும் இடங்களை - மக்கள் செறிவாக வாழும் குடியிருப்புப் பிரதேசங்களை - தம்பாட்டில் உயர்பாதுகாப்பு வலயம் என்று அறிவித்திருக்கின்றார்கள் படையினர். குடாநாட்டில் 30 சதவீத பிரதேசம் இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கபளீகரம் செய்யப்பட்டிருப்பதாகப் புலிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்களில் அதிகமானோர் யாழ்.குடாநாட்டையும் கிளிநொச்சியையும் சேர்ந்தவர்கள் என்று ஜனாதிபதியே ஒப்புக் கொண்டுள்ளார்.

அவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பதையும் அவர் ஒப்புக்கொள்கிறார். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்றும் அவர் கூறுகின்றார்.

ஆனால், மக்கள் செறிவாக வாழும் குடியிருப்புப் பிரதேசத்தில் கணிசமான பகுதியை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கும் போது -

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் மக்களை மீளக்குடியமர்வதற்கு படையினர் அனுமதி வழங்க மறுத்து வருகின்றபோது -

இடம்பெயர்ந்த இந்த மக்கள் எப்படி மீளக் குடியமர்வது?

- இதுதான் புலிகளின் கேள்வி; கரிசனை; சீற்றம் - எல்லாமுமே.

எனவே, முன்னரே இணக்கம் காணப்பட்ட - மக்களின் மீளக்குடியமர்வு என்ற வழமை நிலைக்கான ஏற்பாட்டை - நடைமுறைப்படுத்தாமல் தவிர்ப்பதற்காக அரசு தரப்புத்தான் உயர்பாதுகாப்பு வலயம் என்ற புதுக்கதையை - புதிய நிபந்தனையை - போடுகின்றது.

இது ஜனாதிபதிக்குப் புரிந்தால் நல்லது.

# பிரதேச செயலர் பிரிவுகளில் சூழல் பாதுகாப்புக் குழுக்கள்

## அமைக்கும்படி அரச அதிபர் பணிப்பு

கொக்குவில்,ஏப்.25

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சூழல் பாதுகாப்புக்கான குழுக்களை உருவாக்கி செயற்படுத்துமாறு யாழ். அரச அதிபர் பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார். கடந்த கால யுத்தம் காரணமாக சுற்றுச் சூழலில் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்ப்படுத்தும் நடவடிக்கையாகவே இந்த மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மரங்கள், கட்டடங்கள் அழிக்கப்பட்டமை,

விளைநிலங்கள் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படாமை உட்பட பல காரணங்களால் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது.

துரித மீள்குடியமர்வு, அதனைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகள் போன்றவை அதிகளவில் செயற்படுத்தப்படவேண்டியுள்ளன. இந்நடவடிக்கைகளுக்கு மணல் அகழ்தல், மரங்களைத் தறித்தல், கற்கள் தோண்டப்படல் போன்ற செயற்பாடுகள் கூடியளவு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இயற்கை வளங்களை இச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கின்றன. இதனை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இருக்கின்ற வளங்களை சூழல் பாதிப்படையாத வண்ணம் உபயோகிப்பதும் முக்கியமானதாகும்.

இது தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு, கட்டட தொழில்நுட்ப நிர்மாண மதியுரைக்குழு என்ற அமைப்பை உருவாக்கவும் -

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இது தொடர்பாக உப குழுக்களை உருவாக்கவும் -

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சூழலை பாதிப்படையச் செய்யும் நடைமுறைகளை இதன் மூலம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடின்றி மணல் அகழ்வு நடைபெறும் பிரதேச செயலர் பிரிவுகளில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக "மாவட்ட சூழல் சுற்றாடல் பாதுக்காப்பு கட்டட தொழில்நுட்ப மதியுரைக் குழு" உருவாக்கப்படும். அப்பிரதேசத்தில் மணல் அகழ்வு நடைபெறும் போது அது தனியார் காணியானாலும் சரி, அரச காணியானாலும் சரி அவற்றை ஒரு நடைமுறைச் செயற்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஓ-76)

### கல்முனை நகர அபிவிருத்தி

# ஹரீஸ் — மயோன் போட்டியால் அலுவலகம் திறக்கப்படவில்லை

சாய்ந்தமருது,ஏப்.25

கல்முனைத்தொகுதியை அபிவிருத்தி செய்வதில் குறிப்பாகக் கல்முனை நகர அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எச்.எம்.எம்.ஹரீஸுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான மயோன் முஸ்தபாவுக்குமிடையே கடும்போட்டி நிலவிவருகிறது.

இதன் விளைவாகவே கல்முனையில் கடந்த செவ்வாய்க்கிழமை திறக்கத் திட்டமிடப்பட்டிருந்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் உபஅலுவலகம் திறக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் தமக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்தே உபஅலுவலகத்தைத் திறந்து வைக்கும் பணி நிறுத்தப்பட்டது என்று மயோன் முஸ்தபா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கல்முனைத் தொகுதி அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் உப அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை அலுவலகத்தைத் திறந்து வைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு "என்னைப் பிழையாக நினைக்க வேண்டாம். என்னுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைப்பதை மட்டும் இப்போதைக்கு விட்டுவிடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

இது விடயத்தில் எனது கட்சித் தலைவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடந்தேன். மற்றப்படி வேறு எவருக்கும் அஞ்சி நான் செயற்படவில்லை.

"இந்த அலுவலகம் திறக்கப்படும் போது, திறந்து வைப்பவர் நிச்சயமாக நீங்கள். அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்" என்று பிரதமர் எனக்கு உறுதியும் அளித்தார். இப்படி மயோன முஸ்தபா தெரிவித்தார். (ஓ)

## முகாமைத்துவம் குறித்த பயிற்சி

வலிகாமம் தெற்கு,ஏப்.25

தெல்லிப்பழை, உடுவில் ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சகல பாடசாலைகளினதும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கோட்டங்களைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஓ-152)

### வடக்கு - கிழக்கு பிரதேசத்தில்

# சுற்றுலாத் துறையை வளர்க்க விவரம் திரட்டும் நடவடிக்கை

## மாகாணசபை மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,ஏப்.25

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் -

பிரதேச மட்டத்தில் உள்ள தங்கும் விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் அமைக்க வாய்ப்புள்ள இடங்களின் விவரங்கள் -

ஆகியவற்றை வடக்கு - கிழக்கு மாகாணத் திட்டமிடல் செயலகம் திரட்டி வருகிறது.

வடக்கு - கிழக்கில் சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்கு வசதியுள்ள இடங்கள் உயர்தர தங்கும் விடுதிகளை அமைக்க வாய்ப்புள்ள பகுதிகள் என்பனவற்றின் விவரங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு மாகாணசபைப் பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) வி.எஸ்.சுவாமிநாதன் கோரியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி மன்றங்களின் கீழ்வரும் சகல பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் என்பனவற்றிடமே இந்த விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விவரங்களைத் திரட்டுவதற்கான படிவங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-185)

### நாளை

சித்திரை 13
சனிக்கிழமை
26.04.2003
திதி : தசமி
முற்பகல் 11.00 வரை
நட்சத்திரம் : சதயம்
பின்னிரவு 2.38 வரை
திருநாவுக்கரசு நாயனார் குருபூசை
சுபநேரம் : 2.59 - 4.29
ராகுகாலம் : 8.59 - 10.29
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உள்ளத்தில் உண்மை, வாக்கில் தெளிவு, தொழிலில் திறமை, வாழ்வில் நேர்மை, துன்பத்தில் சகிப்பு இவற்றை அடைவதே வெற்றிக்கு வழி.

# புலிகளைப் போருக்கு இழுக்க இனவாதிகள் முனைகின்றனர்!

## மாதம்பாகம தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.25

விடுதலைப் புலிகளைப் போருக்கு வலிந்து இழுக்கும் நடவடிக்கைகளில் சில இனவாதிகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் தலைவர் மாதம்பாகம அத்வத்த தேரர் இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் பேச்சை இடைநிறுத்தியுள்ளமை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கை இனவாதிகளுக்கும் சமாதானத்தை விரும்பாத சக்திகளுக்கும் பேச்சைப் புலிகள் இடைநிறுத்தியுள்ளமை ஒரு வாய்ப்பாக அமைந்துவிடக் கூடும்.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே புலிகளை நம்பக்கூடாது என்ற கருத்தை தெற்கிலுள்ள இனவாதிகள் பரப்பிவந்திருக்கின்றனர்.

நாட்டின் பல பாகங்களிலும் வன்முறைகளைத் தூண்டிவிட்டு விடுதலைப் புலிகளை போருக்குத் தூண்டும் நடவடிக்கைகளில் சில இனவாதிகள் முனைந்து செயற்பட்டு வந்திருக்கின்றனர்.

- என்று மாதம்பாகம தேரர் கூறினார். (ஓ-4)

### புலிகள் மீதான தடையை நீக்கி

# சமாதான நடவடிக்கைகளில் இந்தியா ஒத்துழைக்க வேண்டும்!

## 'இந்து' பத்திரிகைக்கு பாலா செவ்வி

புதுடில்லி,ஏப்.25

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இந்தியா முன்வரவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தான் உதவுவதாகவும் -

ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் -

அடிக்கடி இந்தியா கூறிவந்திருக்கிறது. அவ்வாறு கூறினால் மட்டும் போதாது. இலங்கையில் இடம்பெறும் சமாதான முயற்சிகளுக்கு நேரடியாக உதவ இந்தியா முன்வரவேண்டும். சமாதான முயற்சிகளுக்கு உதவும் முகமாக எமது தலைமையுடன் பேச்சுக்களை நடத்த வசதியாக விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா தளர்த்த வேண்டும்.

அதேவேளை, இதுவிடயமாக இந்தியா ஏனைய அமைப்புக்களின் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்தாமல் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனேயே பேச்சு நடத்த வேண்டும்.

இவ்வாறு அந்தச் செவ்வியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# பசுவதையைத் தடுப்பதற்கு அலுவலர்களை இடமாற்றுக!

## பாதுகாப்புச் சங்கம் யோசனை

குருநகர்,ஏப்.25

கொல்களத்தில் இறைச்சி விற்பனைக்காக பசு மாடுகள் சட்ட விரோதமாக வெட்டப்படுவது தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. இதனை நடைசெய்யும் நோக்குடன் இங்கு பல வருடங்களாக சேவைபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர்களை சுழற்சி முறையில் இடமாற்றம் செய்யுமாறு, யாழ் மாவட்ட பசுவதை தடுப்புச் சங்கம் சமர்ப்பித்த மகஜரில் ஆலோசனை தெரிவித்துள்ளது.

மாட்டு இறைச்சிக்கடைகளில் சட்டவிரோதமாக வெட்டப்படும் இறைச்சி தினந்தினம் விற்பனை செய்யப்படுகின்றது. இதனைத்தடுக்க யாழ்.மாநகரசபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மாட்டு இறைச்சிக் கடைகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் -

போயா விடுமுறை நாள்களிலும் மாட்டு இறைச்சிக் கடைகள் சில வற்றில் சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை செய்யப்படுகிறது. இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் - அம்மகஜரில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஒ-51)

## சமுர்த்தி முகாமையாளருக்கு கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி முகாமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு யாழ்செயலக மாநாட்டு மண்டபத்தில நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் எதிரிவீர பிரேமரத்ன, வடக்கு - கிழக்கு மாகாண சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் திருமதி எம்.வி. பந்துசேன ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ஒ-10)


## தத்துவ அதிகாரம் இல.16079

தற்போது பெரிய பிரித்தானியாவில் 47, பார்க் கேட் றோட், வெலிங்டன், சரேயில் வசிப்பவரும், சங்கானை கிழக்கைச் சேர்ந்தவருமான செல்லையா நாகநாதா ஆகிய நான், சட்டத்தரணி மு.க.சுப்பிரமணியம் முகதாவில் திரு.கனகர் பாலசிங்கம் சார்பாக நான் 19 ஓகஸ்ட் 1997ஆம் திகதி நிறைவேற்றிய தத்துவ அதிகாரத்தை இத்தால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

(17170)

## இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்

யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை



ஸ்ரீ சோட்டானிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீ வெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்
மணிசாமி அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்தகாரியம் பார்க்கப்படும், திருமணத் தடங்கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித் தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? செய்வினை, பில்லி, சூனியம், வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
மணிசாமி அவர்கள்
54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
பழைய லிங்கம் கூல்பார் அருகில், யாழ்ப்பாணம்.

(17148)


## OBITUARY NOTICE

### JESUDASON - LILY THANGAMMAH

Beloved wife of Robert, mother of Padmini, Kamalini, Anandhi, Thirupathy, Malini, Rajan and Karuna, Mother-in-law of David Jayarajah, Thavarajan Arulambalam, Devi, Shereen and Edwin Vimalanathan, passed away peacefully at home, 5 Raymer Walk, Horley, Surrey, RH6 9XQ, UK on 22nd April.

Mrs.Lily Thangammah Jesudason was an old girl of Chundikuli Girls' College and a retired teacher (1948-1970) of Stanley School, Navalar Road, Jaffna.

Service at St.Bartholomew's Church, Horley, UK at 2p.m. on Monday 28th April followed by burial in the church ground.

A.Rajasingham.

T.P. No: 01 293776459 (17172)

## நெஞ்சை விட்டகலா 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 07 - 1932



உதிர்வு 25 - 04 - 2000

### அமரர் கபிரியேல் அன்ரனி பெர்னாண்டோ

(ஓய்வுபெற்ற அதிபர்)

அன்புத் தந்தையே, பப்பா நீங்கள்
எம்மைப்பிரிந்து மூன்று ஆண்டுகளானாலும் உம்
இனிய முகமும் இன்சொல்லும் என்றும்
எம் மனதை விட்டு நீங்காது.

ஆக்லேன்,
உடுவில். (17136)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மனித மனங்களை ஆட்டுவிக்கும் அசுர சக்திகளுள் ஒன்று 'நான்'!

'நான்' பணிவுடையவனாக இருக கிறேன். 'நான்' சாதுவானவன், 'நான்' அகங்காரமற்றவன், 'நான்' பணக்காரன், 'நான்' பொறுமைசாலி, 'நான்' கெட்டிககாரன் - இப்படிக் கூறுவதும் ஒருவிதத்தில் தவறே!

இது நல்ல கதையாக இருக்கின்றதே!

நான் பணிவுடையவனாக இருக்கின்றேன் என்பதை இப்படிக் கூறாமல் வேறு எப்படித்தான் கூறுவது என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால், இந்த 'நான்' இருக்கின்றதே! லேசுப்பட்டது அல்ல. மனித மனத்தை ஆட்டிப்படைக்கும் ஓர் அசுர சக்தி.

'நான்' என்பது எவர் மனதில் குடிகொண்டுள்ளதோ அவர் மனதில் ஆணவம், அகங்காரம் என்பன சொலலாமல் கொள்ளாமல் குடியேறிவிடும்.

அதனால்தான் பெரியோர், எளியோனாக பணிவுடன் இரு, சாதுவானவனாகமாறு, ஒருக்காலும் தற்பெருமையுடையவனாகாதே என்று கூறியிருக்கின்றனர்.

'நான்' பணிவுடையவனாக இருக்கின்றேன் என்று சொல்லும்போது சொல்லவந்த விடயம் என்னவோ நான் பணிவுடையவன் என்பதுதான். ஆனால், ஆழமாக உற்றுப்பார்த்தால் பணிவுடையவனாக நீ இருக்கின்றாய் என்று சொல்வதன் மறைபொருளில் முதலில் நீ நான் மிகவும் உயர்ந்தவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதனால்தான் நான் பணிவுடையவனாக இருக்கின்றேன் என்று சொல்லிக் காட்டுகிறாய்.

இந்த 'நான்' என்பதனை எப்போது உயர்வாகப் பயன்படுத்த முற்படலாம்? தன்னைத் தானே ஒருவன் அறிந்து கொள்ளும் போதுதான். ஆனால், அச்சமயத்தில் இந்த நான் அவனை விட்டு தூர விலகிவிடும். இதற்குக் கீழுள்ள சம்பவத்தைப் பாருங்கள்.

குரு ஒருவரிடம் சீடர்கள் கல்வி கற்று வந்தனர். அவர்கள் சிறந்த பணிவுடையவர்களாகவும் குருவில் பக்தி கொண்டவர்களாகவும் இருந்தனர். அவர்கள் எல்லோரிடமும் குருவும் மிகவும் அன்பாக இருந்தார்.

சீடன் ஒருவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. குருவுக்கு நாங்கள் பணிவிடை செய்கின்றோம். அவர் சொற்படி நடக்கிறோம். இங்குள்ள எல்லோரும் ஒரே செயல்களைத் தான் செய்கிறோம். அப்படியானால் குரு யார் மீது அதிக அன்பு வைத்திருக்கிறார்? எப்போது எமது பாடம் முடியும் நாம் முற்றுந்துறந்த முனிவராவது? இதை நாம் எப்படி அறிவது!

சீடன் ஒருநாள் குருவிடமே கேட்டு விட்டான். குரு தனக்குள் சிரித்துக் கொண்டே மற்ற சீடர்களையும் அழைத்து வரச் சொன்னார். அவர்கள் வந்த பின் அவர்களிடம் 'அதோ தெரிகிறதே மரம் அந்த மரத்தை தொட்டு விட்டு வரவேண்டும்' என்றார்.

சீடர்கள் முண்டியத்துக்கொண்டு ஓடிச் சென்று மரத்தைத் தொட்டனர்.

மரத்தைத் தொட்டுவிட்டு வந்து 'குருவே நான் மரத்தைத் தொட்டு விட்டேன்' 'நான்' மரத்தைத் தொட்டு விட்டேன் என்று கூறினர். ஆனால், ஒரு சீடன் மட்டும் எதுவும் பேசாமல் நின்றான்.

குரு அவனிடம் கேட்டார் "ஏனப்பா

### ஞானக்கதிர்

நீ மட்டும் பேசாமல் இருக்கின்றாய்?" அந்தச் சீடன் சொன்னான், "குருவே தங்கள் கட்டளைப்படி செய்தேன். இதில் என்னால் ஆனது ஒன்றுமில்லை. 'நான்' மரத்தை தொட்டுவிட்டேன் என்று எப்படிச் சொல்வது 'நான்' என்று எதனைக் குறிப்பிடமுடியும்? இந்தச் சரீரத்தையா? அல்லது ஆன்மாவையா? இரண்டும் இணைந்துதானே இந்தச் செயலைச் செய்தது?" என்று கூறினான்.

குரு மெதுவாக தமது சீடர்களை பார்த்தார். அவர்களுக்கு தங்களில் யார் பெரியவன் என்று புரிந்தது. ஆகவே 'நான்' என்பதனை நாம் மறந்தாலே நமது வாழ்வு வளம்பெறும்.

நன்றி 'சுடர்'

## தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களினதும் சகல ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் இன்று காலை 10மணிக்கு யாழ்பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ள இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது. (எ-ரி)

## வடமராட்சிப் பகுதி சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.25

அம்பாறை மாவட்ட சமூக நல வாழ்வு அமைப்பு தனது பணிகளை வடமராட்சிப் பகுதிக்கு விஸ்தரிக்க உள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் உட்பட மூன்று பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.(ஒ-5)


கண்டிவீதி, சாவகச்சேரியில்
அமைந்திருக்கும்
கடைத்தொகுதிகள் வாடகைக்கு

முன்னாள் இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை அமைந்திருந்த இடமும் சேர்ந்த இரண்டு கடைகளும்.

தொடர்பு:
ச.திரவியம்
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(17157)

## ட்ரைவிங்

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் ஓட்டுபவர்களுக்கு மிகவிரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- க.ரூபன்
44B, முதலாம் மாடி,
ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13.
T.P.:071 298551, 0777 750023

(C-27528)



யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை

**பழைய மாணவிகள் சங்கப் பொதுக்கூட்டம்**

இடம் :- யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை
காலம் :- 27-04-2003 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 2.30மணி (புதிய நேரம்)

பழைய மாணவிகள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(17171) - அதிபர்.

## SHOTOKAN KARATE INTERNATIONAL

S.K.I.F.



சென் செய்
தி.இரதிதரன் (ரதீஸ்)
2ஆம் கறுப்புப்பட்டி

சிகான்
பொனி றோபேட்
8ஆம் கறுப்புப்பட்டி
(பிரதம ஆசிரியர்)

S.K.I.F பிரதம ஆசிரியரும் பரீட்சகருமான Shihan Bonnie Roberts அவர்களால் மேற்படி ஆசிரியர் தரமுயர்த்தப்பட்டதையிட்டு வாழ்த்துகின்றோம்.

புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

S.K.I.F.
மாணவர்கள்.

முகவரி:

- அன்ரன் தையலகம்
  கோண்டாவில் வீதி, இருபாலைச் சந்தி.
- சுதாகரன்
  கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- T.இரதிதரன்
  வலியாணந்த பிள்ளையார் கோவிலடி,
  துன்னாலை வடக்கு,
  பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(17108)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா வேலாயுதம்

மண்ணில் மலர்வு 1924.07.28 — விண்ணில் சங்கமம் 2002.04.25

திதி: 15.04.2003

தெல்லப்பழை, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, பழைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்டு, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் தொழில் புரிந்து, இறுதிநாளை திருகோணமலையில் கழித்துச் சிவபதமடைந்த அன்னாரின் முதலாம் ஆண்டு திதிப் பிரார்த்தனை திருகோணமலையில் நடைபெறும்.

கோப்பாய் தெற்கு,
பழைய வீதி, கோப்பாய்.

என்றும் ஆறாத விழிநீருடன்:
மனைவி, பெறாமக்கள், உறவினர்.

(17095)

# வாழ்க்கையிலும் தொழில் துறையிலும் முன்னேற ஒழுக்கம் முக்கியமானது

## "புவக் அரம்ப" ஏஜன்சீஸ் அதிபர் லக்சிரி பீரிஸ் கண்ட வெற்றிகள்



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் பிரியந்த லக்சிரீ பீரிசை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்னம்.

### வர்த்தக ஸ்பெஷல்

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 22ஆம் திகதி தோன்றி தனது தொழில் முன் னேற்றம் பற்றி விளக்கினார் பிரியந்த லக்சிரீ பீரிஸ்.

மொரட்டுவ புவக் அரம்ப ஏஜன் சீஸ் அதிபர் பிரியந்த லச்சிரீ பீரிஸ் 13 ஆயிரம்ரூபாவுடன் ஆரம்பித்த பலசரக்கு வியாபாரம், இன்று ஆலவிருட்சமாக வளர்ச்சி பெற்றதை இங்கு விளக்கு கின்றார்.

அரசாங்க உத்தியோகத்திலிருந்த தந்தையார் அனுபவித்த கஷ்டங்களால் சம்பள உத்தியோ கத்துக்குப் போகக் கூடாதென உறுதி பூண்ட இவர், தந்தையாரின் ஒய்வுக்குப் பின்னர் 13ஆயிரம் ருபாவை தந்தையாரிடம் இருந்து பெற்றார். அப்பணத்தில் மொரட்டுவையில் பலசரக்கு வியாபாரத்தை ஆரம் பித்தார். அக்கால கட்டத்தில் இவர் நாளொன்றுக்குப் 14மணித்தியாலங்கள் தொழிலைக் கவனித்தார். 1980ஆம் ஆண்டு மொரட்டுவையில் அச்சுத் தொழிலுக்குத் தேவையான உப கரணங்களை இறக்குமதி செய்து விநியோகிக்க ஆரம்பித்தார்.

1983ஆம் ஆண்டு திருமணத்தின் பின்னர் இவரது மனைவியும் இவருக்கு இத்தொழிலில் பேருதவி புரிந்ததை நினைவு கூருகின்றார். இன்று மொரட்டுவ செலான் வங்கிக்கு முன் னால் புவக் அரம்ப ஏஜன்சீஸ் காட்சியறை கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றது.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் பிரியந்த லச்சிரீ பீரிஸை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேச மான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* இளைஞர் பருவத்தில் தொழிலொன்றைத் தேடுவதை விடுத்து வியாபாரம் செய்யும் நோக்கம் எப்படி ஏற்பட்டது?

*பதில்:* தகப்பனார் அரசாங்கத் தொழில் புரிந்ததால் குடும்ப செலவுகளுக்குப் பற்றாக்குறை நிலவியது. இருந்தும் எனது தகப்பனார் ஓய்வு பெற்றவுடன் ஒரு பலசரக்குக் கடையொன்றை ஆரம்பித்தார். அதன் பின்னர் குடும்பத்தில் வசதிகள் பெருகின. இந்நிகழ்ச்சியே என்னை வியாபாரத்துறைக்கு செல்ல வேண்டுமென்ற ஊக்கத்தைத் தந்தது.

*கேள்வி:* தொழில்செய்யும் போது நேரம் தவறாமல் ஒழுக்கத்தைப் பேண வேண்டுமென நினைக்கின்றீர்களா?

*பதில்:* உறுதியாக நான் அதிகாலை 5.00மணிக்கு படுக்கையை விட்டு எழுந்து தயாராகி, காலை 7.30 மணிக்கு அலுவலகம் வந்து விடுவேன். தொழிலில் மாத்திரமல்ல வாழ்க்கையிலும் ஒழுக்கமும் நேர்மையும் அத்தியாவசியமாகிறது. நான் ஒரு கிறிஸ்தவன். எனக்கு இரு புதல்விகளும் ஒரு புதல்வனும் இருக்கின்றார்கள். தொழிலில் எனது மனைவி எனக்கு உறுதுணையாக இருக்கின்றார். எனது மனைவி குடும்ப வேலைகள் அனைத்தையும் கவனித்துக் கொள்வதால் என்னால் எனது தொழிலில் முழுமையாக ஈடுபட முடிகின்றது.

*கேள்வி:* மொரட்டுவ, தச்சுத் தொழிலுக்கு பேர் பெற்றது என்பதாலா உங்களது தொழிலை அங்கு ஆரம்பித்தீர்கள்?

*பதில்:* நிச்சயமாக, மரத்தளபாடங்களுக்கு மொரட்டுவ பெயர் பெற்றது. மொரட்டுமுல்லயில் நூற்றுக் கணக்கான தளபாட மொத்த விற்பனைக் கடைகள் இருக்கின்றன. இங்கிருந்து நாடு முழுவதற்கும் தளபாடங்கள் அனுப்பப்படுகின்றன. இத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்களையும் இயந்திர உபகரணங்களையும் இறக்குமதி செய்து வழங்குவதுதான் எங்களது தொழில். இப்போது கட்டடப் பொருள்களையும் இறக்குமதி செய்கின்றோம்.

*கேள்வி:* உங்களது தொழில் இப்போது முன்னேற்றப்பாதையில் செல்கின்றதா?

*பதில்:* ஆம். உண்மையிலேயே முன்னேற்றப் பாதையில்தான் செல்கின்றது. 1985ஆம் ஆண்டுதான் இத்தொழிலை ஆரம்பித்தேன். 1994ஆம் ஆண்டு ஆர்ப்பிக்கோ நிறுவனம், எமது ஸ்தாபனத்தை மொரட்டுவ பகுதிக்கான விநியோகஸ்தர் தரத்துக்கு நியமித்தது. வாடிக்கையாளர்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கையை நாம் மிகக் கவனமாகப் பாதுகாத்து வருகின்றோம். எனவே எங்கள் தொழில் முன்னேற்றம் அடைகிறது.

*கேள்வி:* நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

*பதில்:* பிளாஸ்டிக் பொருள்களால் மரத் தளபாடங்களுக்கு பாதிப்பு இருக கிறது. குறைந்த விலைக்கு பிளாஸ்டிக் கதிரைகள் கிடைக்கின்றன. ஆனால், மரத்தாலான கதிரைகளைப் போல் அவற்றை நீண்டகாலம் பயன்படுத்த முடியாது. நாங்கள் பல பொருள்களை இறக்குமதி செய்கிறோம்.

இறக்குமதியின் போது வங்கிக் கடன் பெற வேண்டியுள்ளது. இதற்கு வட்டி செலுத்த வேண்டி ஏற்படுவதால், இறக்குமதி செய்யும் பொருள்களின் விலையை சற்று அதிகரிக்க வேண்டி ஏற்படுகிறது.

*கேள்வி:* எவ்வளவு வீதமான வட்டி வங்கிகளுக்கு வழங்கவேண்டியிருக்கிறது?.

*பதில்:* 17 சதவீதம் வரை செலுத்த வேண்டி உள்ளது. இதை 13 சதவீதமாகக் குறைத்தால் வசதியாக இருக்கும்.

*கேள்வி:* உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

*பதில்:* நான் இவ்வளவு காலமும் மொரட்டுமுல்லயில் எனது வியாபாரத்தை நடத்தி வந்தேன். காலி வீதியில் காட்சியறையொன்றை அமைக்க வேண்டுமென்ற எனது நீண்ட நாள் கனவு இவ்வருடம் ஜனவரி 31ஆம் திகதி நனவாகியது. ஐந்து மாடிகளைக் கொண்ட இக் கட்டடத்தின் மூன்று மாடிகள் இப்போது பூர்த்தியடைந்துள்ளன. எஞ்சியுள்ள இருமாடிகளும் வெகு விரைவில் பூர்த்தியடையும். ஒரே கூரையின் கீழ் தச்சுத் தொழிலாளர்களுக்குத் தேவையான சகல உபகரணங்கள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதே எனது நோக்கம்.

*கேள்வி:* உங்களுக்கு மிகப் பெரிய களஞ்சியசாலை இருப்பதாக தெரிவித்தீகள். அது குறித்து ஏதாவது கூறமுடியுமா?

*பதில்:* எனது களஞ்சியசாலை பிலியந்தலை சேருபொலவில் இருக்கிறது. ரி.என்.எல். தொலைக்காட்சி சேவைக்கு அருகே இருக்கிறது. 100 பேர்ச் காணியில் இக்களஞ்சியசாலை அமைந்துள்ளது.

இங்கு ஒரே தடவையில் ஆறு கண்டெய்னர்களிலிருந்து பொருள்களை இறக்கி களஞ்சியப்படுத்தலாம். 100 கண்டெய்னர்களிலுள்ள பொருள்களை இங்கே களஞ்சியத்படுத்த முடியும். நாடு முழுவதுமுள்ள எமது வாடிக்கையாளர்கள் இங்கிருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

*கேள்வி:* உங்களது தொழில் முன்னேற்றத்தில் செலான் வங்கியின் பங்கு என்ன?

*பதில்:* இதை சொல்லித்தான் ஆகவேண்டும். 1989 ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் கிளர்ச்சி இடம் பெற்றது. 1985 ஆம் ஆண்டு எமது வியாபாரத்தை ஆரம்பித்தோம்.

1989 ஆம் ஆண்டு நாம் நான்கு வருடங்களை மாத்திரம் பூர்த்தி செய்திருந்த வேளையில் கிளர்ச்சி இடம் பெற்றது. 1990 ஆம் ஆண்டு மொரட்டுவையில் செலான் வங்கி ஆரம்பிக்கப் பட்டது சாதாரண வியாபாரியான நானும் அங்கு வங்கிக்கணக்கொன்றை ஆரம்பித்தேன். செலான் வங்கியின் உதவிகள் காரணமாக எனது வியாபாரம் தலைநிமிர்ந்து நின்றது.

- இவ்வாறு கூறினார் பிரியந்த லக்சிரி பீரிஸ்.

# தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே அரசே முரண்பாட்டை ஏற்படுத்துகிறது!

## மகளிர் சங்கத் தலைவி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.25

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் எத்தகைய கருத்து முரண்பாடுகளும் கிடையாது. அவர்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவது அரசாங்கமே.

-இவ்வாறு குற்றஞ்சாட்டினார் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தின் தலைவி திருமதி விஶாகா தர்மதாஸன்.

கண்டியில் இயங்கிவரும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பீச் இன் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'மனதை ஆற்றுப்படுத்தல்' எனும் தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

தமிழ் மக்களின் கலாசார வழிபாட்டு விழுமியங்கள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை நீக்குவதற்கு தமிழ் மக்களின் வழிபாட்டு, கலாசார விழுமியங்களைத் தென்பகுதி சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள அரசியல் தலைவர்கள் ஒவ்வோர் இன மக்களுடைய சமய, கலாசார நிகழ்ச்சிகளுக்கு வாழ்த்துச் செய்திகளை மட்டும் அனுப்பினால் போதாது. அந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு அந்தக் கலாசார விழுமியங்களை தத்தமது இனங்களுக்கிடையேயும் பரப்ப வேண்டும். அதன்மூலம் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

மோதல் என்பது தவிர்க்க முடியாதது. மனித வரலாற்றில் அது பின்னிப் பிணைந்துள்ளது. அதனை முற்றுமுழுதாக தவிர்க்க முடியாது. ஆனால், அதனைத் தணிக்க முடியும். இதுதொடர்பான விடயங்களைத் தற்போது ஆராய்ந்து வருகின்றோம். இதுதொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் கலந்தாலோசிக்கவுள்ளோம் -என்றார்.

இக்கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டு மக்கள், தென்பகுதி சிங்கள மக்கள், மலையக மக்கள் மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகள் பற்றி ஆராயப்பட்டன. (ஒ-5)

## கைதடிச் சம்பவம் குறித்து 13பேர் பொலீஸாரால் கைது!

தென்மராட்சி,ஏப்.25

கைதடி கிழக்குப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவம் தொடர்பாக 13 பேர் சந்தேகத்தின் பேரில் சாவகச்சேரி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 13 சந்தேகநபர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் இவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த இப்பகுதியைச் சேர்ந்த மூவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

# கிழக்கு அபிவிருத்தி அமைச்சிடம் அபிவிருத்தித்திட்டம் ஏதும் இல்லை

## திகாமடுல்ல எம்.பி. மயோன் முஸ்தபா கவலை

பதினைந்து மாதங்கள் கடந்தும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சு எந்த விதமான அபிவிருத்தித் திட்டங்களையும் தயாரிக்கவில்லையே என்று மிகுந்த கவலையுடன் கூறினார் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மயோன் முஸ்தபா.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு அபிவிருத்தி அமைச்சினால் எதுவுமே நடப்பதாக இல்லை. ஒதுக்கப்படுகின்ற பணத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கின்ற விண்ணப்பத்தை நிரப்புவதற்கும் மாத்திரம் அமைச்சில் அதிகாரிகளை வைத்திருக்கிறார்கள்.

இதனைவிடுத்து அமைச்சினால் ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதற்கு அவர்களிடம் அதிகாரிகளும் இல்லை. இதற்கென முன்வரவுமில்லை என்றே கூறவேண்டும்.

'சிரான்' அமைப்பு மூலமாகத் திட்டங்கள் கேட்கின்ற போதுதான் கண்விழித்திருக்கிறார்கள்; ஓடித் திரிகிறார்கள். எந்தத் திட்டத்தைத் தயாரிக்கிறார்களோ தெரியவில்லை.

-இப்படி அவர் கூறினார்.

எங்களையும் சேர்த்துச் செய்யும் என கடந்த 15 மாதங்களாக எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தோம். எங்களிடமுள்ள அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளலாம் எனவும் எண்ணியிருந்தோம். ஒன்றும் நடைபெறுவதாகவே இல்லை. வேதனைக்குரியது; பரிதாபகரத்திற்குரியது. அது எதுவுமே செயறபடுத்தாத அமைச்சாகவே இருந்து கொண்டிருக்கிறது

- இவ்வாறு மயோன் முஸ்தபா கவலைப்பட்டார். (எ)

# வாழைச்சேனையில் இரு இளைஞர்கள் கைது!

மட்டக்களப்பு,ஏப்.25

வீடியோப் படம்பிடித்த இரு தமிழ இளைஞர்கள் இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் நண்பகல் வாழைச்சேனைப் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

வாழைச்சேனைப் பகுதியிலுள்ள அவலநிலையைப் படம்பிடித்து ஊடகங்களுக்கு விநியோகிக்கவே கிராம அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த இவ்விளைஞர்கள் முற்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆட்டோ சாரதியான மார்க்கண்டு மஞ்சு (கிரான்), எஸ்.தர்மேந்திரன் (வாழைச்சேனை) ஆகிய இவ்விருவரும் மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

399, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத தைச் சேர்ந்த அருபா தங்கராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.738580257V) யாழ்ப் பாணத்திற்கும் நவாலிக்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். T.P. 222 5336. (17183)

அச்சுவேலி தெற்கு என்னும் முக வரியுடைய இரவீச்சந்திரன் கலாவதி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.628161208V), விசேட அடையாள அட்டை, தொழில் அடை யாள அட்டை என்பன யாழ்.நகரில் 13.04.2003இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழோசை விளம்பரசேவை அல்லது நாதன் மணிக்கூட்டு தொழிலகம், கஸ்தூரி யார் வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (17178)

நுணாவில் மத்தியைச் சேர்ந்த அப்புத்துரை விக்னகுமார் என்பவரின தேசிய (583170685V), விசேட அடை யாள அட்டைகள் கடந்த வாரம் கற்குழி கந்தசாமி கோயிலில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கௌரி விக்னகுமார் (T.P. 222 5847) எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (17162)

நிற்சாமம், சங்கானையைச் சேர்ந்த திருமதி அழகரத்தினம் மகேசு என்ப வரது தேசிய அடையாள அட்டை (இல.646183898V), விசேட அடையாள அட்டை (0904012077) 13-04-2003 இல் யாழ்.நகரில் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரி யுடன் தொடர்புகொள்ளவும். (17181)

### விற்பனைக்கு

பஜாஜ் M80 மோட்டார் சைக் கிள் விற்பனைக்குண்டு (One Hand Use). தொடர்பு: க.தங்கராஜா, 50/5, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப் பாணம். (17174)

கொங்கிறீற் கற்கள், No - I அரிசி, தேங்காய் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள லாம். இ.சேகர், 162, அரசடி வீதி, நல்லூர் (டயாணா கொமினிக்கேசன் முன்பாக). T.P. - 3146 (17176)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

45நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய அழகிய பிறவுன் கலர் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.G.செல்வம,107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (17184)

45 நாள் நிரம்பிய பூச்சி அகற்றப் பட்ட தூய இன யேமன் ஷெப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாபு, பழைய தபாற் கந்தோர் வீதி, சங்கானை. (17180)

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் கல்பேட்ஸ் இறைச் சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: Y.A. சுரேஸ், கிராமக்கோடு சந்தியில் இருந்து 150 மீற்றர் உள்ளே, பருத் தித்துறை. (17188)

### இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை தரப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம் (நல் லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17169)

### மணமகள் தேவை

33 வயது, பூரம் 3ஆம் கால், செவ்வாயற்ற, கிரகபாவம் 55, உயரம் 5'6", யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஐரோப்பிய நாட்டில் நிரந்தர பிரஜாவுரிமை உடைய தற்போது யாழ் வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான, நற்குணமுள்ள மணமகள் தேவை. முழுவிபரத்துடனும் தொடர்பு. விளம பர இல.1859, மே/பா உதயன்.(17155)

### அபூர்வ ஜோதிடம்

சித்தரின் நவீன மருந்தியலில் தீராத எத்தகைய நோய்க்கும் உடனடி நிவாரணி. காண்ட முறை யில் பெயர் அதிர்ஷ்டம். தினமும் 8.30 - 2.00 p.m. சேச் முன்லேன், முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கு. (17155)

---

### 'ஹன்டர்' மோதியதில் பொலீஸார் இருவர் காயம்!

'ஹன்டர்' மோதியதில் பொலீஸார் இருவர் படுகாயமடைந்தனர்.

மந்திகை பொதுச் சந்தைக்கு முன் பாக, பிரதான வீதியில் நேற்றுமுன் தினம் மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஜி.ஜி.ஜெயரட்ண (வயது 27), இந்திக ராஜபக்ஷ (வயது 22) ஆகி யோரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக காக நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இவர்களை மோதியதாகக் கூறப் படும் 'ஹன்டர்' வாகனத்தின் சாரதி வாகனத்தை விட்டுவிட்டுத் தப்பியோடி விட்டதாகவும்-கூறப்பட்டது.(எ-6-4-173)

---

### மகன் சுவிஸிலிருந்து தந்தைக்கனுப்பிய

# புத்தாண்டுப் பரிசுகள் பறிமுதல்; புலிப்படம் அச்சிட்டு இருந்ததாம்!

கொழும்பு,ஏப்.25

கொழும்பில் வசிக்கும் தந்தை யொருவருக்கு வெளிநாட்டில் வசிக் கும் அவரது மகன் புத்தாண்டுக்காக அனுப்பிவைத்த பரிசுப் பொருள்கள் புலிப்படம் பொறிக்கப்பட்டிருந்த கார ணத்தால் சுங்கத் துறையினரால் கைப் பற்றப்பட்டன.

புறக்கோட்டை வெல்ல வீதியைச சேர்ந்த தமிழர் ஒருவருக்கு சுவிஸில் வசிக்கும் அவரது மகன் புத்தாண்டுப பரிசாக கப்பற்பொதிச்சேவை ஊடாக ரீசேர்ட்டுக்கள், வாழ்த்துமடல்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் உட்பட சில பொருள்களை அனுப்பியிருந்தார். அவற்றில் சில பொருள்களில் புலிப் படம் பொறிக்கப்பட்டிருந்ததனை சுங் கச் சோதனையின் போது அதிகாரி கள் கண்ணுற்றனர். இதனையடுத்து சுங்கத்துறையின் பேலியகொட பிர யாணப் பொதிப்பிரிவு உத்தியோ கத்தர்களால் அப்பொருள்கள் இவ் வார ஆரம்பத்தில் கைப்பற்றப்பட்டன.

அப்பொருள்களை எடுத்துச் செல்ல ஸ்ரீலங்கா துறைமுக அதிகார சபை யின் பேலியகொட களஞ்சிய நிலை யத்துக்கு வந்த குறிப்பிட்ட தந்தை யிடம் அலுவலர்கள் இது தொடர் பாக விசாரித்ததாகவும் -

தனது மகனிடம் இருந்து கிடைத்த தகவலையடுத்து தான் பொருள்களைப் பொறுப்பேற்க வந்த தாகக் கூறிய அத்தந்தை, உண்மை யில் அப்பொதியில் இருக்கும் பொருள்களின் விவரம் எதுவும் தனக்குத் தெரியாதெனத் தெரிவித் துள்ளதாகவும் -

கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி சுங்கப் பணிப் பாளர் நாயகத்துக்குத் தெரியப் படுத்தியதுடன், சுங்கப்பகுதி அதி காரிகள் தொடர்ந்து விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

---

### நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய நூற்றாண்டு விழா
### அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

முதலாம் பரிசு 2189
இரண்டாம் பரிசு 2777
மூன்றாம் பரிசு 4292

ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 1. 2542 | 2. 0139 | 3. 0136 |
| 4. 6301 | 5. 2206 | 6. 2806 |
| 7. 0398 | 8. 5367 | 9. 3526 |
| 10. 1533 | | |

(17179)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது இசை மன்றத்தில் இசைபயிலும் மாணவியாகிய
செல்வி சுதாமதி இராமச்சந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**க.இராமச்சந்திரன் (பொன்னுத்துரை)**

அவர்களின் மறைவையொட்டி அதிர்ச்சி அடைவதுடன், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

16/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (17185)

நியூ வீணாகானம்
இசைமன்ற ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08 - 07 - 1947



உதிர்வு
21 - 04 - 1998

## அமரர் கதிரவேலு கந்தையா
(இரத்தினம் - மெக்கானிக்)

திதி: 25-04-2003

விண்ணுலகு நீ சென்று
ஐந்தாண்டுகள் சென்றாலும்
நீங்குமோ உம் நினைவு
அன்பு அப்பாவே!
நீங்கள் எங்களுடன்தான் வாழ்கின்றீர்கள்.

நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்,
மைத்துனர், மைத்துனிமார்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (17187)

---

# மரண அறிவித்தல்கள்

## நடராசா கந்தையாபிள்ளை

*(இளைப்பாறிய லிகிதர், யா/இடைக்காடு மகாவித்தியாலயம்)*

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாய், அச்சுவேலியை வதிவிட மாகவும் கொண்ட ந.கந்தையாபிள்ளை 21.04.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - முத்துபிள்ளையின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி (கனடா), லோகேஸ்வரி (லண்டன்), உமாபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரன் (கனடா), கோபி (லண்டன்), சந்திரிகா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் பவீன், ராதையன் (கனடா), கார்த்திகா, அகிலா (லண்டன்), சந்தோஷ் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.04.2003 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்தாங்குளம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*145, சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.* (17177)

தகவல்:
மனோன்மணி
(மனைவி)

## திருமதி
## காசிப்பிள்ளை சிவக்கொழுந்து

மீசாலை மேற்கைச் சேர்ந்த திருமதி காசிப்பிள்ளை சிவக்கொழுந்து (23-04-2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தர்மபூபதி, பேரின்பமலர், துரைராசா(R.O.O.D.), வசந்தமலர், ரவீந்திர ராசா (ஆசிரியர், நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), இந்திரமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கம், தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரியின் அன்பு மைத்துனியும் பாக்கியதுரை, பூபாலசிங்கம், லலிதா(ஆசிரியை, நயினாதீவு மகாவித்தியாலயம்), ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிறீதரன், பாஸ்கரன், ஜீவரதன், மனோகரன், ராஜேந்திரகுமார், சுபத்திரா(பேராளி), சதீஸ், தர்ஷிகா, வித்தியா, சங்கர், சங்கவி, ராகவி, கஜிஸ்ரன், டிலான், விஜயகுமாரி, சங்கீதா, இலஷ்மன், லக்சாலவன்,கஸ்தூரி, கனிஸ்ரியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24-04-2003) வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு நடைபெற்றன.

மீசாலை மேற்கு. (17182)

தகவல்:
கா.ரவீந்திரராசா
(ஆசிரியர் -மகன்)

---

# தந்தை செல்வநாயகம்


## 26ஆவது நினைவு நாள் நிகழ்ச்சி 26.04.2003



தலைமை: பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.
காலம்: நாளை (26.04.2003) சனிக்கிழமை பி.ப. 3.00 மணி.

**நிகழ்ச்சி நிரல்**

- வரவேற்புரை
- தலைமையுரை
- நினைவுப் பேருரை
  பேராசிரியர் முனைவர் சா.பா. அறவாணன் அவர்கள்
  (முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, இந்தியா)
  பொருள்: 'காந்திய நெறிகளும் தந்தை செல்வாவின் அரசியல் இலட்சியமும்'
- கலை நிகழ்ச்சிகள்:
  இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்.
  ✶ இசைமாலை ✶ நாட்டியாஞ்சலி
- நன்றியுரை:



**அன்று காலை 9.00 மணிக்கு**
**தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும்.**

சிறப்பு விருந்தினராக மதுரை அன்னை தெரேசா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்களும் கலந்துகொள்வார்.

☆ அனைவரையும் திரண்டுவந்து தமிழ்த்தேசியத்தின் தந்தைக்கு அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.☆

தந்தை செல்வா
நினைவு அறங்காவற் குழு.

(C/27542)

# குறுக்குவழி அல்லது ரகசியத் திட்டத்தால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

**சிறிலங்காவின் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா காட்டும் அக்கறை குறித்தும் அரசின் காலங்கடத்தும் அணுகுமுறையால் அரசுக்குப் புதிதாக உருவாகும் பிரச்சினைகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது. பிரபல பத்திரிகையாளரான சுனந்த தேசப்பிரிய எழுதி ஞாயிறு 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம். பேச்சுக்களை இடைநிறுத்துவதாகப் புலிகள் அறிவித்ததற்கு முன்பாக இக்கட்டுரை எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

ஈராக்கிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தம் காரணமாக உலக மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்த அமெரிக்கா, சிறிய நாடான சிறிலங்காவின சமாதானத் தூதுவராக முன்வர முயற்சிக்கிறது. கடந்த 14ஆம் திகதி அதாவது தமிழ், சிங்கள புத்தாண்டன்று அமெரிக்காவுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது. சமாதானத்தை உருவாக்குவதற்கு சிறிலங்காவில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்தில் நிதி உதவிகளை வழங்கும் நோக்கில் முக்கியமான கூட்டம் அன்று அமெரிக்காவின் தலைமையில் வாஷிங்ரன் நகரில் நடைபெற்றது.

சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்கும் நாடாகவும் அதை விட ஒருபடி மேற்சென்று சமாதானத்தை உறுதிப்படுத்தும் நாடாகவும் அமெரிக்கா தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளது. 14ஆம் திகதி கூட்டத்தை ஆரம்பித்து உரையாற்றிய அமெரிக்க ராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் பின்வருமாறு தெரிவித்தார்.

"இங்கு கூடியிருக்கும் நாங்கள் உலகின் பல நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். பல்வேறு நோக்கங்களைக் கொண்ட பல அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். இருப்பினும் மிகப் பெறுமதிமிக்க நோக்குடன் இன்று காலை நாம் இங்கு கூடியுள்ளோம் என நம்புகிறோம். நாம் இங்கிருந்து செல்லும்போது ஒரே நோக்கத்துடன் பிரிவோம். அதாவது ஒன்றிணைந்து செயற்படுவோம். சிறிலங்காவில் சமாதானத்தை உருவாக்குவதற்கு நாம் ஒரு சக்தியாக உருவாகுவோம்.

சிறிலங்காவில் சமாதானத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள காரணத்தாலேயே அமெரிக்கா தற்போது இந்த விடயத்தில் தலையிட்டுள்ளது. எனவேதான் உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பும் எனக்குத் தேவைப்படுகிறது. இது ஒப்பேற்றக்கூடிய முயற்சியாகும். உங்கள் அனைவரதும் ஒத்துழைப்புக கிட்டுமானால் சிறிலங்காவில் சமாதானத்தை உருவாக்கமுடியும்" என அவர் தெரிவித்தார்.

சிறிலங்காவிற்கு நிதி உதவிகளை வழங்கும் நாடுகளை உற்சாகப்படுத்தும் நடவடிக்கைகளில் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் பெருமுயற்சிகளை மேற்கொண்டார். சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் மீது நம்பிக்கை வைத்தால் மாத்திரமே நிதி வழங்கும் நாடுகள் நிதியை வழங்க முன்வரும் என்பது ரகசியமன்று. மீண்டும் யுத்தம் இடம்பெறுமாயின் நிதியுதவிகளை வழங்குவதில் அர்த்தமில்லை. மறுபுறத்தில் சமாதானத்தின் பெறுபேறுகளை மக்களுக்கு வழங்குவதாயின் வெளிநாட்டு உதவிகள் இன்றி சிறிலங்காவால் எதுவும் செய்ய முடியாது. ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்:

"சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதாயின் சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் தாண்டவேண்டிய தடைகள் பல உள்ளன. அந்தத் தடைகள் பெரும்பாலும் அரசியல் அர்ப்பணிப்புக்களிலேயே தங்கியுள்ளன. சமாதான நடவடிக்கைகளின் பயன்கள் மக்களைச் சென்றடைவது புலப்படக்கூடிய பெறுபேறுகளில் தங்கியுள்ளது. தற்போதுள்ள நிலையில் சிறிலங்கா அரசிற்கு இவற்றை நிறைவேற்றுவது எவ்விதத்திலும் முடியாத விடயமாகும். எனவேதான் இவ்வேளையில் சிறிலங்கா அரசுக்கு ஆலோசனைகள் மட்டுமன்றி பொருள் உதவிகளும் மிகவும் தேவைப்படுகின்றன.

சமாதான முயற்சிகள் தடைப்படாத விதத்தில் அதற்கு உந்துசக்தியாக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு தேவைப்படும் ஒரு கட்டத்தை சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்றுவரும சமாதானப் பேச்சுக்கள் அடைந்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் முக்கிய துரும்பாக சமாதானப் பேச்சுகள் விளங்குகின்றன. அதேநேரம் சமாதானப் பேச்சுக்களின் முக்கிய துரும்பாக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு விளங்குகிறது. எவ்வாறாயினும் சிறிலங்காவில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புக் குறித்து சாதகமான கருத்து வளரவில்லை. நோர்வே நாட்டவர்கள் குறித்து பெரும்பான்மை மக்களான சிங்களவர்களிடையே ஆதரவு குறைந்து வருகிறது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு குறித்தும் சிங்கள மக்களிடையே நம்பிக்கை குறைந்துகொண்டு வருகிறது. அமெரிக்கா குறித்து விருப்பு வெறுப்பு என்ற கலப்பு நிலைமையையே காணமுடிகிறது.

சிறிலங்கா மக்களின் (சிங்களவர்களின்) இந்த எண்ணம் சர்வதேச சமூகத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள் காரணமாகத் தானாக மறைந்து விடும் எனச் சிறிலங்கா அரசு கருதுமேயானால் அது தவறான கருத்தாகவே அமையும். பொருளாதார அபிவிருத்தியைப் போன்றே சமாதான முயற்சிகளிலும் முன்னேற்றங்களைக் காட்ட முடியாவிடின் மக்களின் எண்ணங்களை மாற்றுவது கடினமாகும்.

பெரும்பான்மையான மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை என்ற அடிப்படையில் அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. நாட்டு மக்களில் சுமார் 80சதவீதமானோர் யுத்த ரீதியான தீர்வினை விரும்பவில்லை என்பதை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கருத்துக்கணிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், மக்களுக்கு யுத்தத்தின் மீதுள்ள வெறுப்பை சமாதான முயற்சிகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பு என அரசு கருதுமானால் அது மாபெரும் தவறாக அமையக் கூடும். இதற்குக் காரணங்களும் உள்ளன. மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகளில் சமாதான முயற்சிகள் தொடர்பான சிற்சில விடயங்கள் குறித்து பெரும்பான்மையினருக்கு தெளிவான சிந்தனையோ அல்லது நம்பிக்கையோ இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான தொடர்புகள் (உறவுகள்) நாளுக்கு நாள் பலவீனமடைவதாலேயே பெரும்பான்மையினத்தவரிடையே தெளிவான சிந்தனையின்மையும் அவநம்பிக்கையும் வளர்ந்து வருகிறது. உயர் பாதுகாப்பு வலயம், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், முல்லைத்தீவுக் கடல் எல்லை என்பன போன்ற விடயங்களுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. முற்று முழுதாக சிங்கள மக்களின் கோணத்திலிருந்து பார்ப்பதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் கோணத்தில் இருந்து பார்க்கும்போது தீர்வு காணப்படாத விடயங்களால் உருவாகும் பிரச்சினைகள் எவ்வளவு பாரதூரமானவை என்பதை புரிந்து கொள்வது அவ்வளவு கடினமான விடயமல்ல.

சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்படும் முயற்சிகளை சிறு விடயமாக ஏற்றுக்கொள்ளமுடியாது. அதேபோலவே நாட்டில் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் உள்ள பலவீனங்களையும் இவ்வேளையில் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பிரச்சினைகள் மட்டுமன்றி அரசுக்கும் அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கும் இடையேயான பிரச்சினைகளும் சமாதானத்தின் மீதான நம்பிக்கை பாதிப்படையக் காரணமாக அமைந்துள்ளன. இந்தப் பிரச்சினைகள் முன்னரை விடத் தீவிரமடைகின்றனவே அன்றித் தணிவதாகத் தெரியவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் அரசு அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் பார்க்க அந்தப் பிரச்சினைகள் தீவிரமடைய இடமளித்து பார்த்துக்கொண்டிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் அண்மைக் காலத்தில் கடும் போக்கை கையாண்டதற்குகாரணம் ரணில் விக்கிரமசிங்க அரசின் ஏனோ தானோ போக்கே ஆகும். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசு ஆரம்பத்தில் இருந்தே ஒரு தெளிவான நிலைமையைக் கொண்டிருக்கவில்லை.விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்களுக்கு உருவாகும் பல்வேறு பிரச்சினைகளை நிறுத்துவது தொடர்பாக தீக்கமான நிபந்தனைகளை அரசு மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக சுயாதீனமான முஸ்லிம் அரசியல் உணர்வுகள் வெளிவரத் தொடங்கின. புதிதாக உருவெடுத்த இந்த உணர்வலைகளை அமைச்சர் ஹக்கீம் எதிர்நோக்கவேண்டியுள்ளது. எனவேதான் அவர் பகிரங்கமாக அரசை எதிர்க்க ஆரம்பித்துள்ளார். சிங்கள மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் நோக்கில் அரசும் இவ்வாறான நிலையை எடுத்துள்ளது என்பதை நாம் அறிவோம். அவ்வாறான நிலைமையின் கீழ் முஸ்லிம் மக்களின் கடுமையான நிலைப்பாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், இங்குள்ள பயங்கரமான நிலைமை என்னவெனில் விடயம தலைவர்களின் கட்டுப்பாட்டை மீறவும் கூடும்.

தோட்டத்துறையைச் சேர்ந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறுமுகம் தொண்டமானின் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸுடனும் கடந்த சில காலமாக அரசு நல்லுறவைக் கொண்டிருக்கவில்லை. மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் காங்கிரஸின் தேசிய மாநாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் ஆகியனவற்றிற்கு தீர்வினைக் காணும் பொறுப்பு காலத்திடம் கையளிக்கப் பட்டுள்ளது.

இதுவரை ஐ.தே.க.அரசால் அரசியல் அர்ப்பணிப்புகளுடன் கூடிய ஒன்றுபட்ட சக்தியாக விளங்க முடியவில்லை. இனப்பிரச்சினை தொடர்பாக மட்டும் இந்நிலைமை நிலவவில்லை. அண்மையில் ஊடகவியலாளருக்குக் காணி வழங்குவது என ஊடகத்துறை அமைச்சர் திட்டமொன்றைத் தயாரித்தார். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடை செய்து பிரதமர் கட்டளை பிறப்பித்தார். இது ஊடகத்துறை அமைச்சரின் கௌரவத்தைப் பாதிக்கும் ஓர் எதேச்சதிகாரப் போக்கு அரசுக்குள் நிலவுவதையே எடுத்துக்காட்டுகிறது. இவை, பொ.ஐ.முன்னணி அரசு விட்ட தவறுகளை ஐ.தே. கட்சி தற்போது ஆரம்பித்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

எதிர்காலத்தில் இந்த நிலைமை தொடருமா, இல்லையா என்பதையும் கூறமுடியாதுள்ளது. ஆகக் குறைந்தது ஐ.தே.க. தலைமைத்துவம் சமாதானத்தை உருவாக்குதல மற்றும் நேர்மையான அரசை நடத்துதல் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே நிலைமையில் மாற்றம் ஏற்படமுடியும்.

அரசின் தலைவர்களுக்கு சமாதான முயற்சிகள் மீதுள்ள நம்பிக்கையும் அதன் வெளித்தோற்றமுமே மக்கள் சமாதான நடவடிக்கைகள் மீது நம்பிக்கை வைப்பதற்கு முக்கிய காரணமாகும்.

உண்மையில் சமாதான நடவடிக்கைகள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகள் அமைச்சுகளைத் தன்வசமாக்கப் போவதாக ஜனாதிபதி அடிக்கடி விடுக்கும் அச்சுறுத்தல்களோ அல்லது ஜே.வி.பியுடன் இணைந்து அரசைக் கவிழ்க்கப் போவதாக அனுரா பண்டாரநாயக்கா விடுத்துள்ள இறுதி அறிவிப்போ அல்ல. ஜனாதிபதியின் தலைமையில உருவாக்கப்படும் எந்தவோர் அரசும் சமாதான முயற்சிகளைத் தொடரும் எனத் தெரிகிறது. எனவே, எதிர்நோக்கும் சவால்தான் என்ன? யுத்தத்தின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பை நிச்சயமான சமாதானத்திற்கு பயன்படுத்த வேண்டும் - அவர்களை சமாதான முயற்சிகளின் பங்காளர்களாக்க வேண்டும். இதை வெறுமனே சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு மூலம் நிறைவேற்றிவிட முடியாது. சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அரசியல் கருத்தரங்குகள் மற்றும் அரசியல் அர்ப்பணிப்புகள் இதற்குத் தேவை.

சமாதானம் மற்றும் நேர்மையான அரசு ஆகியவற்றை திறந்த அரசியல் நடவடிக்கைகள் மூலமே உருவாக்க முடியும். இதை விடுத்து குறுக்கு வழிகள் மூலமோ அல்லது ரகசியத் திட்டங்கள் மூலமோ அல்லது நேர்மையற்ற அரசியல் மூலமோ உருவாக்க முடியாது என்பதை சமாதானத்தை உருவாக்க உலகில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன. ★

**தமிழில்: கஜனி**



## அபகரித்துச் சென்ற வாக்குப்பெட்டியில் அரைவாசி வாக்குகள் போடப்பட்டிருந்தன

### உடதலவின்ன வழக்கில் சாட்சி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.25

வாக்குச் சாவடிக்குள் அத்துமீறி புகுந்தவர்களில் ஒருவர் அங்கிருந்த வாக்குப் பெட்டியை அபகரித்துச் சென்றார். அதில் 50 வீதமான வாக்குகள் போடப்பட்டிருந்தன. உடதலவின்ன படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணையின்போது நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த தேர்தல் பொறுப்பதிகாரி விஜயக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்று வாரங்களுக்குப் பின் மீண்டும் நேற்றுமுன்தினம் ஆரம்பமான உடதலவின்ன வழக்கு விசாரணையின் போது விஜயக்கோன் சாட்சியமளித்தார்.

அரச தரப்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ சாட்சியைக் குறுக்கு விசாரனை செய்தார்.

*கேள்வி:-* நீர் அரச சேவையில் சேர்ந்து எத்தனை வருடங்கள்?

*பதில்:-* 15 வருடங்கள்.

*கேள்வி:-* உமது சேவையின் போது தேர்தல் கடமையில் ஈடுபட உமக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தனவா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* 2001ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்டீரா?

*பதில்:-* ஆம்

*கேள்வி:-* எந்தத் தேர்தல் ஸ்தானத்தில் நீர் கடமையாற்றினீர்?

*பதில்:-* உடதலவின்னவில் உள்ள ஜம்மு அஸ்ஹர்மகாவித்தியாலய வாக்குச் சாவடியில்.

*கேள்வி:-* 5ஆம் திகதி நடைபெறும் தேர்தல் கடமைக்குச் செல்லுவதற்கு முன்பு கச்சேரியில் உமக்கு ஏதும் பொறுப்புத் தந்தார்களா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* என்ன தந்தார்கள்?

*பதில்:-* இரண்டு வாக்குப்பெட்டிகள்

*கேள்வி:-* 5ஆம் திகதி காலை எத்தனை மணிக்கு வாக்குப்பதிவு ஆரம்பமாகியது.

*பதில்:-* காலை ஏழரை மணிமுதல் வாக்குப்பதிவு சுறுசுறுப்பாக நடைபெற்றது.

*கேள்வி:-* மக்கள் வந்து வாக்களித்தார்களா?

*பதில்:-* காலை 10 மணிவரை சுமார் 50வீதமானவர்கள் வாக்களித்தார்கள்.

*கேள்வி:-* காலை 10 மணிக்கு பின் ஏதும் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெற்றனவா?

*பதில்:-* ஆம், தூரத்தில் வெடிச்சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் வெடிச்சத்தம் அருகில் கேட்டது.

*கேள்வி:-* பின்பு என்ன நடந்தது?

*பதில்:-* இராணுவ உடையில் சிலர் வாக்குச்சாவடிக்கு வந்தார்கள்.

*கேள்வி:-* பின்பு என்ன நடந்தது.

*பதில்:-* கறுப்பு காற்சட்டையும் நீல சேட்டும் அணிந்த ஒருவர் வாக்குச் சாவடிக்குள் அத்துமீறி நுழைந்து வாக்குப்பெட்டிகளை அபகரித்துச் சென்றார்.

*கேள்வி:-* நீர் என்ன செய்தீர்.

*பதில்:-* வாக்குப்பெட்டியை விட்டுச் செல்லுங்கள். நாம் அதனைக் கசசேரிக்குக் கொடுக்கவேண்டும் என்றேன். ஆனால், வந்தவர் அதனைக் கேட்காமல் வாக்குப்பெட்டியை எடுத்துச் சென்றார். அச்சமயம் வெளியே நின்ற ஒருவர் இன்னுமொருபெட்டி இருக்கிறது என்று கூச்சல் போட்டார்.

*கேள்வி:-* பின்பு என்ன நடந்தது.

*பதில்:-* பின்பு வந்து இரண்டாவது பெட்டியையும் எடுத்துச்சென்றார் ஒருவர். அதில் வாக்குச்சீட்டுகள் இருக்கவில்லை.

*கேள்வி:-* பொதுவாக வாக்குச்சாவடிக்குள் யார் யார் பிரவேசிக்கலாம்?

*பதில்:-* வாக்குப்போடுகிறவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள்.

*கேள்வி:-* அரசியல் கட்சியின் தலைவர்கள் வரலாமா?

*பதில்:-* வேட்பாளர்கள் வரலாம்.

*கேள்வி:-* உமது தேர்தல் சாவடியல் இருந்த பொலீஸ் உத்தியோகத்தர்கள் கடமையைச் சரிவரச் செய்தார்களா?

*பதில்:-* ஆம்

*கேள்வி:-* அவர்களிடமிருந்து உமது ஒத்துழைப்புக் கிடைத்ததா?

*பதில்:-* ஆம்

சாட்சியை எதிர் தரப்பு சட்டத்தரணி ஆர்.ஐ.ஒபயசேகரவும் குறுக்கு விசாரணை செய்தார். (எ)

# இந்து மாநாடு குறித்து கலந்துரையாடல்

அடுத்த மாதம் 9, 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலக இந்து மாநாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.மேற்கில் இயங்கும் சகல ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (எ-3)

## தவறிவிட்டது

கையடக்க தொலைபேசி மானிப்பாய்க்கும், பண்டத்தரிப்புக்கும் இடையில் 24.03.2003 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்

**சிங்கம் குறோசறி**
பண்டத்தரிப்பு

என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.0777-589384 (17196)

## காசாளர் தேவை

பண்டத்தரிப்புப் பகுதியில் அமைந்திருக்கும் புகைப்பட நிலையத்திற்கு காசாளராகப் பணிபுரிய பெண் பணியாளர் தேவை. புகைப்படத்துறையில் விருப்புபவர்கள் விரும்பத்தக்கது. சகல சுயவிவரங்களுடனும் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி:-
02.05.2003
விளம்பர இல: 1862
C/O உதயன் (17190)

## படகோட்டியின் சாதனை; பயணிகள் உயிர் தப்பினர்

யாழ்ப்பாணம்,ஏப்.25

நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் துறைமுகத்தை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற மோட்டார் படகு கடல்நீர் உட்புகுந்த நிலையிலும், படகோட்டியின் சாதுரியத்தால் கரை சேர்க்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு நயினாதீவில் இருந்து புறப்பட்ட பயணிகள் படகே இவ்வாறு கரைசேர்க்கப்பட்டுள்ளது.

படகினுள் பயணிகளின் முழங்கால் வரை நீர் உட்புகுந்த போதிலும், படகு குறிகாட்டுவான் துறைமுகத்தை அண்மித்தமையால் அதில் பயணம் செய்த பயணிகள் உயிர் பிழைத்துக்கொண்டனர்.

படகில் கடல் நீர் புகுந்தமைக்கு குறிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்பட்டமையே காரணம் எனக் கூறப்பட்டது. (எ-6)

# பாடசாலை அணிகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரங்கள் பிரிவு ரீதியாக வருமாறு :-

**15 வயதுப் பிரிவு**

உடுவில் மகளிர் கல்லூரி , சண்டிலிப்பாய் இந்துக கல்லூரி, தொக்குவில் இந்துக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள கல்லூரி

இப்பிரிவுகளில் முதல் இரண்டு இடங்களையும் பெற்ற அணிகள் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன என யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா தெரிவித்துள்ளார். (ஒ-5)

## தென்மராட்சி கழகங்களுக்கு!

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகப் பிரதிநிதிகளுக்கான விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு தென்மராட்சி அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் மாறன் அறிவித்துள்ளார். (ஒ-117)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழர் திரு. ந.சிவகுமார்
(நல்லூர் பல நோ.கூ.சங்கப் பணியாளர்)
அவர்களின் அன்புத் தந்தையார்

**சுப்பையா நவரத்தினம்**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
(17193) கிளை - நல்லூர் பல நோ.கூ.சங்கம்

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இலங்கை

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்
அரையாண்டு பரீட்சைகள்
கல்வியாண்டு: - 2002/2003 மற்றும் - 2002/2003 (A)

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் BAD/B.Com முதலாம் அரையாணடுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 12.05.2003 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீள்பரீட்சைக்கு தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 28.04.2003 முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர் (C-27550)

## புலமைப்பரிசில் வகுப்பிற்கான ஆசிரியர்கள் தேவை

பாடசாலைகளில் புலமைப்பரிசில் வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தலில் முன்அனுபவம் உள்ள 35 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள், எமது கல்விநிலையத்தில் கற்பித்தலுக்குத் தேவைப்படுகின்றனர். கொடுப்பனவுகள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தகுதியானவர்கள் பிற்பகல் 3மணிமுதல் 6மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

புலோலி தெற்கு,
புலோலி.

தலைவர்/செயலாளர்
(17191) காந்தியூர் சனசமூக நிலையம்

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(ஸ்ரான்லி கல்லூரி)
பழைய மாணவர் சங்கம்
**விசேட பொதுக் கூட்டம்**

விடயம் : பவள விழா

நாள் : 27-04-2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 4.30 மணி
இடம் : வித்தியாலய பிரதான மண்டபம்
தலைவர் : திரு.சி.வி.கே.சிவஞானம்

பழைய மாணவர்கள் அனைவரையும் (அங்கத்தவர்கள், அங்கத்தவர்கள் அல்லாத) தவறாது சமுகமளித்து ஆலோசனைகளை வழங்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: முன்பு அறிவித்தபடி 26.04.2003 சனிக்கிழமை கூட்டம் நடைபெறமாட்டாது.

தலைவர் (C/27548) - செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலைய விஞ்ஞான ஆசிரியர்
ரவீந்திரராசா அவர்களின் தாயார்

**திருமதி காசிப்பிள்ளை சிவக்கொழுந்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாகி, ஆசிரியர்கள், ஊழியர், மாணவர்கள்,
நயினாதீவு - 06 (17197) அபிராமி கல்வி நிலையம்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2586782 இருந்து
2603262 வரை
சீட்டிழுப்பு இல. 1394
திகதி 23.04.2003

**வெற்றி எண்கள்**

**09 39 52 53 56**

போனஸ் எண் **17**

ஜக்பொட் பரிசு
**ரூபா 2,613,600/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,613,600/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 98 | 10,000/- | 980,000/- |
| 3 | 5,112 | 500/- | 2,556,000/- |
| 2 | 85,914 | 20/- | 1,718,280/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 09ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 105,170 | 10/- | 1,051,700/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,505,980/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா 3,427,800/-**

தொடர் இல. 3586207க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 26ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2593018-8-37
2590631-0-92
2587184-1-81
2592670-5-45
2595935-6-58

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


## 2003 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2003 ஆம் ஆணடுக் காலப்பகுதிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்குத் தேவையான தரமான உள்ளீடுகள், மூலதன உபகரணங்கள், நுகர்வுப் பொருள்கள், திருத்தங்களும், பராமரிப்பும் ஆகியன கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களை 2003 மே மாதம் 9 ஆம் திகதிக்கு முன் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறாக பதிவுக் கட்டணம் ரூபா 100/- செலுத்த வேண்டும். மணியோடரை புலோலி தபாற்கந்தோரில் மாற்றக்கூடியதாக எடுக்கவும்.

மேலும் பதிவு விண்ணப்பங்களில் தங்களது நிறுவனம் அமைந்திருக்கும் இடத்தின் தபால் முகவரி, தொலைபேசி எண், பொருள்கள் விநியோகிக்கும் சேவைகள் ஆகியன பற்றியும் குறிப்பிடப்படல் வேண்டும்.

தேவைப்படும் பொருள்கள், உபகரணங்கள், சேவைகள் பற்றிய தொகுதிகள் பின்வருமாறு:-

| தொகுதி இல. | | பொருள்கள்/சேவைகளின் தொகுதி |
|---|---|---|
| 01. | - | எழுத உதவும் சாதனங்கள் |
| 02. | - | நூலகப் புத்தகங்கள் |
| 03. | - | விஞ்ஞான நுகர்வுப் பொருள்களும், உபகரணங்களும் |
| 04. | - | கணித உபகரணங்கள் |
| 05. | - | விவசாய நுகர்வுப் பொருள்கள், உபகரணங்கள், கருவிகள். |
| 06. | - | விளையாட்டுப் பொருள்கள், உபகரணங்கள் |
| 07. | - | அழகியற் கல்விக்குத் தேவையான உபகரணங்கள் |
| 08. | - | தொழில்நுட்ப நுகர்வுப் பொருள்கள், உபகரணங்கள் |
| 09. | - | விசேட கல்விச் சூழகளுக்கு நுகர்வுப் பொருள்கள் |
| 10. | - | கணனி முறைகள் மற்றும் கணனிகளின் திருத்தங்களும் பராமரிப்பும் |
| 11. | - | ஆய்வுகூட உபகரணங்களின் பராமரிப்பும், திருத்தங்களும் |
| 12. | - | காரியாலய உபகரணங்களான போட்டோ பிரதி இயந்திரங்கள், பிரதி எடுக்கும இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள் ஆகியவற்றின் திருத்தங்களும் பராமரிப்பும். |

வே.தி.செல்வரட்ணம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
(சி-27549) புலோலி, வடமராட்சி

# பாலசிங்கம் கூறும் உள்ளக சுயநிர்ணய உரிமை உலகில் எங்குமே இல்லாத புதிய ஆட்சிமுறை

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் வைத்து 'உதயன்' பத்திரிகைக்கு அளித்த பிரத்தியேக செவ்வியின் எஞ்சிய பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

★ கேள்வி: அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சில விடயங்களால் சமாதான நடவடிக்கைகள் இப்போது முன்நகர முடியாத இக்கட்டில் (Stalemate) சிக்கிப் போயுள்ளன. இரு தரப்பினரும் தங்களுக்குள் உள்ள பிணக்கைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்களுக்கு உதவும் வகையில் - நாட்டின் நலன் கருதி - ஜனாதிபதி என்ற முறையில் நீங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கை என்னவென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

☆ ஜனாதிபதி: முதலில் இருதரப்புமே எனது உதவியை விரும்பவில்லை என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

சமாதான முயற்சிகளுக்கு நான்தான் முக்கிய தடை எனவும், அதைக் குழப்புவதற்கு மறைவில் நாசவேலை செய்து வருகின்றேன் எனவும், கடந்த ஒரு வருடகாலமாகப் புலிகள் குற்றஞ்சுமத்தி வருகின்றனர். இந்த நிலையில் நான் எப்படி உதவமுடியும் என நான் யோசிக்கின்றேன்.

நோர்வே அரசை நான்தான் இங்கு அழைத்தேன். எனவே, சமாதான முயற்சிகளுக்கு எதிராக நான் செய்த நாசவேலை அல்லது குழப்பம் குறித்து ஏதேனும் ஒரு தகவலைத்தானும் திட்டவட்டமாக இதுதான் என்று குறிப்பிடும்படி அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்டு பதில் பெறுங்கள் என நான் நோர்வே அரசைக் கோரினேன். அவர் பின்னர் பதில் தருவார் என எனக்கு கூறப்பட்டது. இப்போது ஒரு வருடமாகிவிட்டது எனக்கு இன்னும் பதில் வரவில்லை. இந்தநிலையில் நான் எப்படி உதவமுடியும் என்று எனக்கு விளங்கவில்லை.

இப்பிரச்சினைக்கு என்னிடம் திட்டவட்டமான யோசனைகள், ஆலோசனைகள் உள்ளன. ஆனால், இவர்களின் இத்தகைய போக்குக் காரணமாக நான் இதில் சம்பந்தப்படவிரும்பவில்லை.

**உள்ளக சுயநிர்ணய உரிமை: அப்படி ஒன்று இல்லை**

★ கேள்வி:- இனப்பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அமைப்பு மூலம் தீர்வு காண அரசு தீர்மானித்துள்ளது. அரசின் இந்த நிலைப்பாடு குறித்து உங்கள் பிரதிபலிப்பு என்ன?

☆ ஜனாதிபதி: நான் அரசில் அங்கம் வகிக்கின்றேன்தானே! நான் வேறுபடவில்லை.

சமஷ்டி முறைமூலம் தீர்வுகாணும் யோசனையை இலங்கையின் சரித்திரத்தில் முதன் முதலில் முன் வைத்தவர் யார்? பண்டா - செல்வா ஒப்பந்தம் மூலம் எனது தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கதான் அதனைப் பிரேரித்தார். எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தைப் பேச்சுக்கு அழைத்து, அவரோடு அது சம்பந்தமாக ஒப்பந்தம் செய்தார். ஆனால், துரதிஷ்டவசமாக அந்த முயற்சி சிங்களத் தீவிரவாத சக்திகளினால் முறியடிக்கப்பட்டது.

அதன்பின் - விசாலமான - பொருத்தமான - சமஷ்டித் தீர்வு யோசனை, 1997 அரசமைப்பு நகல் மூலமும் தொடர்ந்து 2000 அரசமைப்பு நகல் மூலமும் என்னாலேயே முன் வைக்கப்பட்டது.

எனவே, உங்கள் கேள்விக்கு இதிலேயே பதில் அடங்கிவிட்டது.

ஆனால், நீங்கள் குறிப்பிடும் உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற கொள்கை ஏதும் உலகில் எங்கும் இல்லை.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்றால் என்னவென்று எமக்கு விளங்கவில்லை. இதுகுறித்து அன்ரன் பாலசிங்கம்தான் சதா கூறிக்கொண்டிருக்கின்றார். அதன் அர்த்தம் - வரைவிலக்கணம் - என்னவென்பதை அவர் தெளிவுபடுத்தினால் நல்லது.

அரசியல் விஞ்ஞானம் அல்லது அரசமைப்புச் சட்டம் அறியாதவர்கள் 'உள்ளக சுயநிர்ணய உரிமை' என்று ஏதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

'சுயநிர்ணய உரிமை' என்பது உள்ளது. அது குறித்து எல்லோருக்கும் விளங்கும்.

**புலிகள் பற்றிய என்னுடைய அபிப்பிராயம் தப்பல்ல!**

★ கேள்வி: புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் எழுந்துள்ள யதார்த்த நிலையையும் அரசு மற்றும் புலிகள ஆகிய இரு தரப்புகள் மீதும் சர்வதேச சமூகம்கொடுத்து வரும் அழுத்தங்களையும் நன்கு புரிந்துகொள்ளாமல் - ஏற்கனவே உங்களுக்கு நேர்ந்த கசப்புணர்வுகளின் பின்னணியில் - புலிகள் குறித்து உங்களின் தப்பபிப்பிராயத்தின் (Prejudice) அடிப்படையில் - நீங்கள் தற்போதைய சமாதான நடவடிக்கைகளை அணுகுவதாக அரசியல் விமர்சகர்கள் சிலர் கூறுகின்றார்களே? இது குறித்து உங்கள் விளக்கம் என்ன?

☆ ஜனாதிபதி: யார் அப்படிக் கூறுகின்றார்கள்?

★ கேள்வி: சில அரசியல் விமர்சகர்கள். குறிப்பாகத் தமிழர்பக்கத்தில் உள்ளவர்கள்.

☆ ஜனாதிபதி:- அப்படி என்ன தப்பபிப்பிராயத்தைக் கொண்டுள்ளேன்?

★ கேள்வி: 'புலிகள் இதயசுத்தியோடு பேச்சுக்கு வரவில்லை; வரமாட்டார்கள். பேச்சுக்கு வந்தாலும் இடைநடுவில் முறித்துக்கொண்டு யுத்தத்துக்குப் போய்விடுவார்கள். அவர்களை நம்பமுடியாது. அமைதித்தீர்வு காணும் நல்லெண்ணம் அவர்களுக்கு இல்லை' - என்றெல்லாம் நீங்கள் திரும்பத் திரும்ப கூறுகின்றீர்களே.....?

☆ ஜனாதிபதி:- அப்படி நான் முழு உண்மையைத்தானே கூறுகிறேன். அதில் தவறேதும் இல்லையே?

இலங்கை அரசு, புலிகளோடு அமைதிப் பேச்சு நடத்துவது இது ஆறாவது முறை. நான்காவது, ஐந்தாவது தடவைகளில் நான்தான் புலிகளோடு பேசினேன். அவற்றில் ஒரு தடவை பேச்சுகள் கணிசமான அளவுக்கு முன்னேறின.

நான் ஆட்சிக்கு வந்த பின்னர் புலிகளோடு பேசினேன். மற்றைய சில தலைவர்களைப் போல - கட்சியினரைப் போல - நான் புலிகளோடு இரகசியப் பேச்சு நடத்தவில்லை; இரகசியப் பேச்சில் எனக்கு நம்பிக்கையுமில்லை.

"தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டு வந்துள்ளனர். நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத்தான வேண்டும். ஆனால், ஐக்கிய இலங்கைக்குள் அத்தீர்வு காணப்படவேண்டும். அதற்காக நாங்கள் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்" - என்ற எனது கொள்கையை - கட்சியின் கொள்கையை - பிரசாரப்படுத்தித்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்.

கடந்த காலத்தில் நீதியற்ற பல சம்பவங்கள் நடந்துள்ளன. குறிப்பாக 1983 ஜூலையில் ஐ.தே.கட்சி திட்டமிட்டுக் குண்டர்களை ஏவித் தமிழர்களைக் கொல்லவும், உயிருடன் எரிக்கவும், அவர்களது வீடுகளை தீயிடவும், உடைமைகளைச் சூறையாடவும் வைத்தது. என் கண்ணுக்கு முன்னால் இரண்டு தமிழ் டாக்டர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். நான் தடுத்து நிறுத்த முயன்று தோல்வி கண்டேன். என்னையும் கொல்லப் பார்த்தார்கள்.

எந்தெந்த வீடுகளைத் தாக்க வேண்டும் என்று பட்டியலிட்டுக் கொடுத்து குண்டர்களை ஏவிவிட்டது ஐ.தே.கட்சி.

தமிழர்களுக்குப் பல ஆண்டு காலமாக அநீதி இழைக்கப்பட்டு வந்துள்ளது. அது சரிசெய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் வந்தேன்.

**மரபுகளை மீறி நானே பிரபாவுக்கு கடிதம் எழுதினேன்**

அதனால், திரு.பிரபாகரனுக்கு நானே கடிதம் எழுதினேன். இறைமையுள்ள ஒரு நாட்டின் தலைவர், பயங்கரவாத இயக்கம் ஒன்றுக்குத் தன்னைத் தானே தலைவராக்கிக் கொண்ட ஒருவருக்குக் கடிதம் எழுதுவதா என்று பலரும் என்னைத் தடுத்தனர். நான் அந்த மரபு முறையை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அவருக்குக் கடிதம் எழுதினேன். அவர் ஏற்றுக்கொண்டார். நாங்கள் பேச்சை ஆரம்பித்தோம்.

உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகப்பற்றற்ற முறையிலும் எட்டு மாதங்களுக்கு யுத்தநிறுத்தம் நீடித்தது; பேச்சு நடந்தது.

ஆனால், காரணம் ஏதுமின்றி அவர் எல்லாவற்றையும் குழப்பியடித்தார் மீண்டும் போருக்குப் போனார்.

நாங்கள் இருவரும் - நானும் பிரபாகரனும் - ஒப்பமிட்டு எங்களுக்குள் பரிமாறிக்கொண்ட 43 கடிதங்கள் உண்மை நிலையை எடுத்துரைக்க நல்ல சாட்சியங்களாகும்.

இந்தக் கடிதங்களை வைத்துக் கொண்டு "அரசியல் வஞ்சனை (Political Duplicity) என்ற ஒரு நூலை அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டுள்ளார். உண்மையில் அந்தக் கடிதங்களில் புலிகளுக்குப் பாதகமான சிலவற்றை மறைத்து மற்றைய சிலவற்றை மட்டும் பிரசுரித்தன் மூலம் பாலசிங்கம்தான் வஞ்சனை செய்துள்ளார்.



நாங்கள் அனைத்துக் கடிதங்களையும் ஒன்றுசேர்த்துப் பிரசுரித்துள்ளோம். உண்மை நிலையை அவை தெளிவுபடுத்தும்.

பேச்சை முறித்துக்கொண்டு அவர்கள் யுத்தத்துக்குப் போனார்கள். எமது கப்பல்கள் இரண்டைத் தாக்கி மூழ்கடித்தார்கள். நாம் இறைமையுள்ள அரசு என்ற வகையில் என்ன செய்ய முடியும். தாக்குதல் நடத்தும்போது பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமா? எனவே திருப்பித் தாக்கினோம் யுத்தம் மூண்டது.

பேச்சின்போது அவர்கள் கேட்ட எல்லாவற்றையும் கொடுத்தோம்.

ஆனால், அவர்கள் ஏன் போருக்குப் போனார்கள் என்பதற்கான காரணம் எவருக்கும் தெரியாது.

வடக்குக்கு பல ஆண்டுகளாக நூற்றியிருபதிற்கும் அதிகமான பொருள்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதனால், வடக்கில் உணவு, மருந்துத் தட்டுப்பாடு நிலவியது. அந்த நூற்றியிருபதில் யுத்தத்துடன் நேரடியாகத் தொடர்புடைய ஒரு சிலவற்றைத் தவிர நூற்றிப்பன்னிரண்டு முதல் நூற்றிப் பதினான்கு பொருள்கள் மீதான தடையை நாம் நீக்கினோம்.

மீன்பிடித் தடையை முற்றாகத் தளர்த்தினோம்.

இவ்வளவு சலுகைகளையும் ஏற்றுக்கொண்ட பின்னரும் பேச்சை முறித்துக்கொண்டு புலிகள் போருக்குப் போனார்கள்.

**நோர்வேத் தரப்பை நானே வரவழைத்தேன்**

இவ்வளவுக்கு மத்தியிலும் நான் பிரபாகரனுக்குச் செய்திகளை அனுப்பினேன். 'யுத்தத்தை நிறுத்துவோம்; பேச்சு நடத்துவோம்' என்று திரும்பத் திரும்ப நான் செய்தி அனுப்பியும், 'இல்லை', 'இல்லை' என்றே அவர் பதில் தந்துகொண்டிருந்தார்.

இறுதியாக, 1999 மார்ச்சில் நான் நோர்வேயை வரவழைத்தேன். ஏனெனில், எனக்குத் தமிழரின் நலனில் அதிக அக்கறையும் கவனமும் உண்டு.

நான் தமிழர்களை விரும்புகிறேன். பயங்கரவாதிகளை அல்ல. வன்முறையையும் நான் விரும்பவில்லை.

இலங்கையில் பிரபாகரனும் அவரது விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் மட்டும்தான் வன்முறை அரசியலைக் கொண்டு வந்தார்கள் என்பது தவறு. ரணில் விக்கிரமசிங்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ ஆகியோரும் அதனைத்தான் செய்தனர்.

சிங்களவர் தரப்பில் - தெற்கில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ, ரணில் ஆகியோரின் ஐ.தே.கட்சி அரசினால்தான் வன்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரபாகரனும் பாலசிங்கமும் செய்ததைத்தான் இவர்களும் செய்தார்கள் - வித்தியசமான முறையில். தாங்கள் ஆயுதம் கையிலெடுக்காவிட்டாலும் தமது ஜனநாயக எதிரிகளை அழிப்பதற்காக ஏனையோரிடம் ஆயுதங்களைக் கொடுத்து அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

சுமார் ஐம்பதாயிரம் சிங்களப் பையன்கள் ஐ.தே.கட்சியால் கொல்லப்பட்டனர். அந்தச் செயலை செய்தவர்களில் ஒரு பகுதி ஜே.வி.பியினர்தான். ஆனால், பெரும்பான்மையானோர் ஜே.வி.பி. என்ற தோற்றத்தில் செயற்பட்ட ஐ.தே.கவினர்தான்.

எனவே, அரசியல் வன்முறை அது எந்த வடிவத்தில் இருந்தாலும் நான் அதை எதிர்க்கிறேன். அதை மேற்கொள்பவர் யாராக இருந்தாலும் - அது பிரபாகரன் என்றாலும், பிரேமதாஸ என்றாலும், ரணில் என்றாலும், ஜே.வி.பியினர் அல்லது வேறுயாராயினும் - நான் அவர்களை வெறுக்கிறேன்.

**ஜே.வி.பியினரிடம் நான் கேட்ட கேள்வி**

ஜே.வி.பியை பேச்சுக்கு அழைத்த போது நான் அவர்களிடம் கேட்ட முதல் கேள்வி, "நீங்கள் வன்முறை அரசியலைக் கைவிட்டுவிட்டீர்களா?" என்பதுதான். அவர்கள் 'ஆம்' என்றார்கள். அவர்கள் ஜனநாயக நடைமுறைக்கு வந்துவிட்டார்கள். தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். அது வேறு விடயம்.

அவர்கள் ஜனநாயக வழிமுறைக்கு வந்துவிட்டதால் நாம் அவர்களுடன் பேசுகின்றோம். தனிப்பட்ட முறையில் நான் யாரையும் வெறுக்கவில்லை. எனவே, எனக்குப் புலிகளைப் போல யாரையும் அழிக்க வேண்டிய தேவையில்லை. வேறு பல நல்ல காரியங்கள் எனக்குச் செய்ய உண்டு.

புலிகளின் வன்முறை அரசியலை வெறுக்கிறேன். ஆனால், தமிழரின் நலனில் எனக்கு அக்கறையும் கவனமும் உண்டு.

1983இல் பன்னிரண்டு லட்சம் தமிழர்கள் இங்கு இருந்தார்கள். ஐ.தே.கட்சி அரசு, தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளால் பலர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களில் 85 முதல் 90 வதமானோர் வன்முறை அரசியலை அங்கீகரிக்கவில்லை என்பது எனக்கும் தெரியும். ஏனையோரும்கூட புலிகளுக்குப் பயந்துதான் அத்தகைய அரசியலை ஆமோதிக்கின்றார்கள்.

உங்களுக்குத் தெரியுமா, நானும் விஜேகுமாரதுங்கவும் சேர்ந்துதான் - குறிப்பாக விஜேதான் - ஐந்து முக்கிய தமிழ் ஆயுதக் குழுக்களில் மூன்றைக் குழுக்களை வன்முறை அரசியலைக் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்குத் திரும்புவதற்கு 1987இல் இணங்க வைத்தோம்? அவர்களை ஜனநாயகக் கட்சிகளாகப் பதிய வைத்து ஜனநாயக வழியில் செயற்பட வைத்தோம்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவையும் ஈரோஸில் அரைவாசிப் பகுதியினரும் இவ்வாறு ஜனநாயக வழிக்குத் திரும்பினர். பாலகுமார் மட்டும் பிரபாகரனுடன் சேர்ந்து கொண்டார்.

இந்த மூன்றரைத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களையும் சேர்த்துக் கொண்டுதான் நாம் அப்போது ஐக்கிய சோசலிஷ முன்னணியை உருவாக்கினோம்.

ஆனால், அதற்கு நான்கு நாள்களுக்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்கவின் தலைவரான பிரேமதாஸவினால் விஜேகுமாரதுங்க கொலை செய்யப்பட்டார். ஜே.வி.பியினர்தான் அதைச் செய்தார்கள் என்று கூறப்பட்டாலும் பிரேமதாஸதான் அந்தக் கொலைக்கு உத்தரவிட்டார் என்பது இப்போதைய விசாரணைகளில் தெளிவாகியிருக்கின்றது.

புலிகளிடமிருந்து தமிழ் மக்களை குறிப்பாக புலிகளின் சர்வாதிகாரத்திற்கு எதிராகத் துணிந்து செயற்பட முன்வந்துள்ள தமிழர்களை - காப்பாற்றுவதும் அவர்களுக்காகப் பணியாற்றுவதும், புலிகளை ஜனநாயக வழிக்குத் திரும்பச் செய்வதும், தமிழ்-சிங்கள - முஸ்லிம் ஆகிய அனைவரும் சம உரிமையோடு வேறுபாடின்றி இந்த நாட்டில் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்துவதும் எனது நோக்கங்கள்.

எனவே, புலிகளை ஒரு வன்முறைப் பயங்கரவாதக்குழு, என்ற உண்மையை நான் கூறுவதில் என்ன தப்பு இருக்க முடியும்? அவர்கள் வேறு யார்? உங்களைப் பார்த்து நான் நீங்கள் ஒரு மனிதர் என்று கூறுவது எவ்வளவு உண்மையோ அது போன்ற உண்மையே இது. ஆகவே, நான் புலிகள் குறித்து தப்பபிப்பிராயம் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுவதுதான் தப்பு.

**புலிகள் தரப்போடு இருதடவைகள் பேசினேன்**

என்றாலும், நான் புலிகளுடன் இரண்டு தடவைகள் பேசினேன். என்னைக் கொல்ல அவர்கள் முயன்ற பின்னரும் நோர்வேதரப்பு ஊடாக நான் இரண்டாவது தடவையாகப் பேச்சு நடத்த முயன்றேன. அவர்கள் இணங்கினார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி அதில் ஒப்பமிடுவதாக இருந்தோம். ஆனால், அதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் சடுதியாக - ஒப்பந்தத்தில் - கைச்சாத்திட முடியாது என்று நோர்வேத் தரப்பு ஊடாக எதிர்பாராத அறிவிப்பை அவர்கள் விடுத்தார்கள்.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெல்லப் போகின்றார். அவர் மூலம் தேவையானதை நாம் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்கள் கருதினார்கள். ரணிலுடன் அவர்கள் இரகசிய ஏற்பாடுகள் செய்திருப்பார்கள். அவை என்னவென்பது எனக்குத் தெரியாது.

எனக்குப் புலிகள் குறித்து வேண்டுமென்றே தப்பபிப்பிராயம் (Prejudice) ஏதுமில்லை. மாறாக புலிகள் குறித்து எனக்குத் தெளிவான அறிவுண்டு. நான் மற்றைய சிலரைப் போல் முட்டாள் இல்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாலசிங்கம் கூறும் உள்ளக சுயநிர்ணய...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, என்னிலும் விட புலிகள் மீது இத்தகைய அபிப்பிராயம் (Prejudiced) கொண்ட வேறு அரசியல்வாதிகள் இந்த நாட்டில் இருக்கமாட்டார்கள்.

இந்த நாட்டின் அரசினால் தமிழர்கள் வேண்டுமென்று பாகுபாடு காட்டப்படுகின்றார்கள் என்பதை - எனது அரசையும் எதிர்கால அரசியல் வாழ்வையும் பணயம் வைத்து பகிரங்கமாக அறிவித்த ஒரேயொரு அரசியல் தலைவர் நான்தான்.

1994 இல் ரணிலிடமிருந்து பிரதமர் பொறுப்பை [illegible] சமயம் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக ரணிலிடமும் அவரது அரசிடமிருந்த தீர்வு ஒன்றே ஒன்றுதான் தமிழர்களுக்கு எதிரான வன்முறையும் யுத்தமும்தான் அது.

தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று முதலில் நாட்டுக்குத் தெரிவித்து தலைகீழான - புதிய அணுகுமுறையை நான் நாடினேன். நாங்கள் பேச்சு மட்டும் நடத்தவில்லை. அதற்கப்பால் எமது கொள்கையை நடைமுறைப்படுத்த செயற்றிட்டங்களையும் வகுத்தோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு யுத்தமே ஒரே தீர்வு என்று சிங்கள மக்களில் 80 வீதத்தினர் கருதினர்.

'வெண்தாமரை இயக்கம்' போன்ற எமது விசேட செயற்றிட்டங்கள் மூலம் பேச்சுமூலமான தீர்வை சிங்கள பெரும்பான்மை மக்களை நாம் உணரவைத்தோம். இதன் மூலம் யுத்தத்தில் நம்பிக்கை வைத்த 80 வீத சிங்கள மக்களின் எண்ணிக்கையை 2 வருட காலத்தில் 40 வீதமாக குறையச் செய்தோம்.

வடமாகாணத்தை புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த சமயம் நான் பேச்சுகளை ஆரம்பித்தேன். ஐதேகட்சி வடக்குக்கு அனுப்பத் தடை செய்த நூற்றுக்கணக்கான பொருள்களை நாங்கள் அனுப்பினோம். யாழ்.அபிவிருத்தியை தொடங்கினோம். மூடியிருந்த யாழ்.வைத்தியசாலையை மீளத் திறந்தோம்; பாடசாலைகளை மீள ஆரம்பித்தோம்; யாழ்ப்பாணத்துக்கும் வடக்குக்கும் மின்சாரத்தை விநியோகித்தோம்; மடு வீதியை திறந்தோம்; மின், தொலைபேசி வசதிகளை வழங்கினோம்; ஐ.தே.கட்சி எரித்த யாழ். பொது நூலகத்தை மீளத் திறந்தோம்.

எட்டுமாத காலம் தொடர்ந்த பேச்சு மற்றும் யுத்த நிறுத்தத்தின் பின்னர் புரியாத ஏதோ ஒரு காரணத்துக்காக சமாதான நடவடிக்கையை புலிகள் முறித்துக்கொண்டனர்.

சிங்கள கிராமங்கள், முஸ்லிம் கிராமங்கள் ஆயுதப்படைகள் ஆகியவற்றை அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள். அரசும் இராணுவ ரீதியில் பதிலளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆயினும், இக்காலகட்டத்தில் போதும் தாக்குதலை நிறுத்தி பிரச்சினையை சமரசப்பேச்சு மூலம் முடிவுக்குக் கொண்டுவர முன்வருமாறு கோரி நான் புலிகளின் தலைவர்களுக்கு தொடர்ந்து செய்திகளை அனுப்பினேன்.

அவர்கள் அதற்கு உடன்படாத போது நோர்வேக்காரர்களை நான் வரவழைத்தேன். 1999 மார்ச் முதல் டிசெம்பர் வரை நோர்வே பிரதிநிதிகள் பாலசிங்கத்தையும் சில புலிகளின் தலைவர்களையும் சமரசப் பேச்சுக்கு இணங்குமாறு கோர 18 தடவைகள் சந்தித்தனர்.

### எனக்கு எதிரான புலிகளின் கொலை முயற்சி

இக்காலகட்டத்தில் - 1999 இல் - டிசெம்பர் 18 ஆம் திகதி பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கையிலேயே புலிகள் என்னை கொல்லமுயன்றனர்.

தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கிறது.

இந்த ஒன்பது மாதகாலத்தில் புலிகளின் பிரதம சமரசப் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் சிறுநீரகக் கோளாறால் கடுமையாக சுகவீனமுற்றிருக்கிறார் எனவும் அவருக்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டும் எனவும் நோர்வே ராஜதந்திரிகள் என்னிடம் தெரிவித்தனர்.

பாலசிங்கத்தை நோர்வேக்கு அழைத்துச் சென்று மருத்துவ சிகிச்சை அளிப்பது குறித்து அவர்கள் எனது கருத்தை கேட்டனர். நான் உடனே இணங்கினேன். பாலசிங்கத்தை ஒஸ்லோவுக்கு கூட்டிச் செல்வதற்கான ஒழுங்குகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையிலேயே அவர்கள் என்னைக் கொல்ல முயன்றனர்.

நான் தாக்கப்பட்டு மூன்று வாரங்களின் பின்னர் பாலசிங்கத்துக்கு ஒஸலோவில் சிகிச்சை அளிக்கப்பட நான இன்னமும் இணங்குகின்றேனா என்று நோர்வே ராஜதந்திரிகள் என்னிடம் வினவினர். நான் இணங்க ஒரு சில நிமிடங்களே சென்றன. இச்சந்தர்ப்பத்திலும் எனது மனிதாபிமானம் கண்டு நோர்வே ராஜதந்திரிகள் வியப்புத் தெரிவித்தனர்.

### கடற்புலிகள் அமைப்பு

★ கேள்வி:- விடுதலைப் புலிகளின கடற்புலிகள் அமைப்பை ஒரு கடற்படை போன்று கருதும் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதே. இது குறித்து நேற்றுமுன்தினம் (செவ்வாயன்று) நீங்கள் பிரதமருடன் கலந்தாலோசித்துள்ளீர்கள். உங்கள் கருத்து என்ன?

☆ ஜனாதிபதி: உலகில் எந்தப் பகுதியிலும் - சமஷ்டியிலும் உச்ச சமஷ்டி உள்ள நாடுகளில்கூட - தனியான இராணுவத்துக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. தனிநாடாக இருந்தாலே தவிர, இராணுவம், கடற்படை, விமானப்படை போன்ற எவற்றையும் நீங்கள் தனியாக வைத்திருக்க முடியாது. முப்படையும் வெளியுறவுக் கொள்கை விடயமும் மத்திய அரசின் கீழ்மட்டும்தான் இருக்கவேண்டும். மற்றைய எல்லாவற்றிலும் நீங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளலாம். இதுதான் அடிப்படை. இந்த ரீதியில் தான் பல நாடுகளில் அதிகளவிலும் பிற நாடுகளில் பல்வேறு அளவிலும் அதிகாரம் பகிரப்பட்டுள்ளது.

1997 இல் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட நகல் திட்டம் அதிகளவு அதிகாரப் பகிர்வு உடையது.

எனது சிறுவயது முதல் தமிழர்களின் இனப்பிரச்சினை குறித்து நான் நன்கு கற்று அறிந்து வந்துள்ளேன். அது மாறவில்லை. எனக்கு அதில் போதிய அறிவுண்டு. அதனடிப்படையில் நாம் தயாரித்த நகல் திட்டத்தில் தமிழர்களுக்கு அதிக அதிகாரப் பகிர்வு வழங்க நான் முன்வந்தேன்.

ஆனால், ரணில் அன்று அதற்கு நூறு வீதம் எதிராக - மாறாக - இருந்தார். அந்த நகல் திட்டம் குறித்து அவருடனும் அவரது தரப்பினருடனும் ஐந்தரை மாதங்கள் பேசினோம். காணி அதிகாரங்களைப் பகிர்வது போன்ற விடயங்களில் அதிகாரங்களைப் பகிரக் கூடாது என்று அவர் விடாப்பிடியாக நின்றார். அப்படிக்கொடுப்பது நாட்டைப் பிரித்துக் கொடுத்த மாதிரி என்றார். அவரது எதிர்ப்புத்தன்மையால் 2000 ஆம் ஆண்டு நகல் திட்டத்தில் அதிகாரப் பகிர்வுகளை நாம் வெட்டிக் குறைக்க வேண்டியதாகிவிட்டது.

இப்போது அவர் தலைகீழாக மாறி எல்லாவற்றையும் கொடுக்கப்போகின்றேன் என்கிறார்.

எனவே, புலிகள் உட்பட யாருக்கும் தனிக்கடற்படை அந்தஸ்து அளிக்கப்படமாட்டாது; அதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

குறிப்பாக தாம் அளித்த வாக்குறுதிகளை அடிக்கடி மீறும் - நாட்டுக்கு எதிராக யுத்தத்தைத் தொடுத்துவரும் - புலிகளுக்கு அத்தகைய அனுமதி வழங்கப்படமாட்டாது.

★ கேள்வி:- கிழக்குக் கடலில் ஆயுதங்களைக் கடத்தி வந்ததாகக் கூறப்படும் புலிகளின் கப்பலைத் தாக்கி அழிக்கும்படி விசேட உத்தரவை நீங்களே கடற்படைக்கு விடுத்தீர்கள் என்று மங்கள சமரவீர பகிரங்கமாக அறிவித்துள்ளார். உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவீர்களா?

☆ ஜனாதிபதி:- அது குறித்து நான் கருத்துக் கூறவிரும்பவில்லை. நீங்கள் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ அல்லது சுயமரியாதையுடைய அரசின் ஒரு படைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாகவோ இருந்தால், உங்கள் நாட்டுக்குள் சட்டவிரோதமான முறையில் ஆயுதம் கடத்தப்படும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? அதுதான் நடந்தது.

### ஜே.வி.பியுடன் கூட்டு எந்தவகையில் நியாயம்

★ கேள்வி: தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கக் கூடாது என்ற பேரினவாதப் போக்குடைய ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர பொதுஜன ஐக்கிய முன்னணி முயல்கின்றது. இது தமிழ்மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அது குறித்து என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

☆ ஜனாதிபதி: அதிகாரப் பகிர்வு என்ற முக்கிய விடயத்தில் எமது கொள்கையுடன் ஒத்துவராத யாருடனும் நாம் கூட்டுச்சேர மாட்டோம் என்பதை முதலில் தெளிவாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

தமிழ்மக்களின் உரிமைகளை, வன்முறை வழிமுறைகளை விட்டு, ஜனநாயக வழியில் பெறலாம் என்பதற்கு மூன்றரைத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களை இணங்க வைக்கலாம் என்றால் -

நாட்டுக்கு எதிராக வன்முறைப் போரை நடத்தும் விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்குத் திரும்பச் செய்யலாம் என்ற நோக்கில் அவர்களுடன் பேச்சு நடத்தலாம் என்றால் -

வன்முறை வழிகளைக் கைவிட்டு ஜே.வி.பியினர் ஜனநாயக வழிக்குத் திரும்பலாம் என்றால் -

பேரினவாதப் போக்குள்ள ஜே.வி.பியினரை கலந்துரையாடித் திருத்தி, அதிகாரப் பகிர்வுக்கு இணங்க வைப்பதில் என்ன தப்பிருக்க முடியும்? அது நல்லதுதானே?

★ கேள்வி: தமிழ் பேசும் மக்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி...?

☆ ஜனாதிபதி: இந்த நாட்டில் தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளார்கள். நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தோரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மக்களின் ஞாபகசக்தி பொதுவாகக் குறைவு. சில ஏமாற்றுக்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி - கடந்த காலத்தை மறந்து - அவர்கள் ஏமாளிகளாகிவிடுகிறார்கள்; முட்டாள்களாகி விடுகின்றார்கள்.

எனவே, யார் உண்மையில் தங்கள் நலனுக்காக உழைக்கின்றார்கள், யார் தங்களை ஏமாற்ற முயல்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்வதில் மக்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அதற்கு நாட்டில் என்ன நடக்கின்றது, சரித்திரத்தில் என்ன நடந்தது என்பது பற்றிய உண்மைகளை - விடயங்களை - அவர்கள நன்கு அறிந்திருக்க வேண்டும். அதன் பின்னர்தான யாருடன் பேசுவது, யாருடன் சேர்ந்து செயற்படுவது என்பதை அவர்கள் முடிவுசெய்யவேண்டும்.

கடைசியாக நான் கூறுவது ஒன்றுதான். நாட்டின் தலைவி என்ற முறையில் தமிழர்களைக் கடைசிவரை நான் கைவிடமாட்டேன்.

ஆனால் இந்தக் களியாட்ட விழாக்களிலோ, ஜோக்குகளிலோ நம்பிக்கை வைத்திருக்கவில்லை. நிலையான தீர்வைத்தான் நான் விரும்புகிறேன்.

நிரந்தரத் தீர்வு குறிப்பிடத்தக்க ஒரு முறையில்தான் பெறமுடியும்; பழைய வழிமுறைகளில் அல்ல.

காஷ்மீரில் அவர்கள் பேசினார்கள். ஒரு கோட்டை வரைந்தார்கள். ஆனால் தொடர்ந்து 55 வருடங்களாக அவர்கள் சண்டை பிடிக்கின்றார்கள்.

பாலஸ்தீனத்திலும் அப்படி முடிவு செய்தார்கள். ஆனால், 55 வருடங்களாக யுத்தம் நடக்கின்றது.

அப்படிப்பட்ட தீர்வையா நீங்கள் விரும்புகின்றீர்கள்? என்றும் நின்று நீடிக்கக் கூடிய - காலங்காலமாக இல்லாவிட்டாலும் - ஒரு சில தலைமுறைக்காவது தாக்குப் பிடிக்கும் ஒரு தீர்வுதான் எமக்குத்தேவை.

விடுதலைப் புலிகளை மட்டுமல்லாமல் - முழுத்தமிழர்களையும் - நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் தீர்வை நாம் காண வேண்டும். அதற்காக நாம் உழைப்போம்.

★ உதயன் ஆசிரியர்: தங்கள் பேட்டிக்கு நன்றி.

☆ ஜனாதிபதி: நான் கூறியவை அனைத்தையும் பிரசுரிப்பீர்களா? அப்படி உங்களால் பிரசுரிக்க முடியுமா? அதில் உங்களுக்குச் சிக்கல் இல்லையா?

★ ஆசிரியர்: நிச்சயமாக முழுதாகப் பிரசுரிப்போம். நன்றி.

## சமய சந்நிதிகளில்

பொன்னாலை சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறும்.

அடுத்த மாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-6-28)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.25

தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி (வடபத்திரகாளி) அம்மன் ஆலயத்தின் வேள்வி பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (எ-6)

☆ ☆ ☆

இளவாலை புனித நீற்றம்மாள் தேவாலய வருடாந்த உற்சவம் நேற்று பிற்பகல் 5மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாளை சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலி இடம்பெற்று திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் கோயிலில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5.30மணியளவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நாளை சனிக்கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

☆ ☆ ☆

சுழிபுரம்,ஏப்.25

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நாளை சனிக்கிழமை நண்பகல் வழக்கம்பரை அம்மன் கோவிலிலும் பிற்பகல் சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயத்திலும், பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயிலிலும் திருமுறைஓதல், சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகளுடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-28)

☆ ☆ ☆

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்பட்டு வருகின்ற அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை சனிக்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறும்.

☆ ☆ ☆

தென்மராட்சி,ஏப்.25

பளைப் பிரதேச கத்தோலிக்க மக்கள் புனித ஞாயிறையொட்டி எதிர்வரும் 30ஆம் திகதி பளை புனித நீக்கிலார் தேவாலய அரங்கில் விழா ஒன்றினை நடத்தவுள்ளனர்.

அன்றைய தினம் மாலை 3.00மணி தொடக்கம் மறுநாள் காலை வரை நாடகங்கள், வில்லிசை போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.(ஓ-17)



# யாழ்.நவீன சந்தை உட்புற கடைகளின் முன்புற றாக்கைகள் அகற்றப்பட்டன

## மாநகர சபை அதிகாரிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்ப்பாண நவீன சந்தை உட புறக்கடைகள் சிலவற்றின் முன்பாகப் பொருத்தப்பட்டிருந்த 'றாக்கை'கள் நேற்றுக்காலை யாழ்.மாநகரசபை உத்தியோகத்தர்களினால் அகற்றப் பட்டன.

இதனையடுத்து காலை 9 மணி யளவில் ஒன்று கூடிய கடைஉரிமை யாளர்கள் மாநகரசபை அலுவலகத் துக்குச் சென்று தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

அங்கு அப்போது மாநகர சபை ஆணையாளர் இருக்கவில்லை. அங் கிருந்த ஏனைய உத்தியோகத்தர் களுக்கும் கடைகளின் உரிமையாளர் கள, ஊழியர்களுக்கும் இடையில் கடு மையான வாக்குவாதம் ஏற்பட்டது.

றாக்கைகள் உடைக்கப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக நவீன சந்தையின் உட்புறக் கடைகள் பல நேற்று முழுநாளும் திறக்கப்பட வில்லை.

இந்த விவகாரம் தொடர்பாக மாந கரசபை ஆணையாளர் இ.இராமலிங் கம் கருத்துத் தெரிவித்தபோது -

நவீன சந்தையின் உட்புற மற்றும் வெளிப்புறக் கடைகளில் முன்பாக பொருத்தப்பட்டிருந்த றாக்கைகள் பொதுமக்களுக்கு மிகவும் சிரமங் களைக் கொடுப்பதாக அமைந்திருந் தன. எனவே மாநகரசபையின் சட்ட விதிகளுக்கு முரணான வகையில் கடை உரிமையாளர்களால் அமைக் கப்பட்டிருந்த இந்த றாக்கைகளை அப் புறப்படுத்துமாறு பல தடவைகள் நாம் அறிவுறுத்தியிருந்தோம். ஆனால், கடந்த புதுவருட வியாபாரத்துக்குப் பின்னர் - ஏப்ரல் 15 ஆம் திகதிக்குப் பிறகு தாம் அவற்றை அகற்றிவிடுவ தாக கடைஉரிமையாளர்களும் வணி கர் கழக நிர்வாகிகளும் உறுதியளித் திருந்தனர். ஆனால், குறிப்பிட்ட தவ ணை முடிவடைந்து சில நாள்கள் கழிந்து விட்ட நிலையிலும் அவை அப்புறப்படுத்தப்படவில்லை.

றாக்கைகளை அகற்றுமாறு சில தினங்களுக்கு முன்னர் இறுதி அவ காசம் வழங்கப்பட்டது. அப்போதும் றாக்கைகள் அகற்றப்படவில்லை. இதனையடுத்தே வேறு வழியின்றி நேற் றுக்காலை எமது உத்தியோகத்தர்கள் பலவந்தமாக அவற்றை அகற்றினர் - என்றும் தெரிவித்தார்.

எமது உத்தியோகத்தர்கள் விரை வில் நவீன சந்தைப் பகுதியைப் பார்வையிட்டு அங்கு பொதுமக்க ளுக்கு இடைஞ்சல்கள் ஏற்படாத வகையில் 'றாக்கைகளை' சிறியளவில அமைப்பதற்கு ஏற்ற இடவசதிகள் இருந்தால் அவற்றை அமைப்பதற் குரிய அனுமதியை வழங்குவோம் என்றும் மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

(ஐ-4)

# மூதூர் வழமைக்குத் திரும்புகிறது

மூதூர்,ஏப்.25

தமிழ் முஸ்லிம் பிரமுகர்களைக் கொண்ட குழுவின் பேச்சுக்களில் ஏற்பட்ட இணக்கப்பாடுகளின் பின் னர் மூதூர் வழமைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது.

கடந்த 23 தினங்களாக மூதூரில் நிலவிய பதற்றம் தணியத்தொடங்கி யதை அடுத்து நகரின் மத்தியில் சன நடமாட்டத்தை நேற்று காணமுடிந்தது. பிரதான சந்தை உட்பட அங்காடி வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கை கள் ஆரம்பமாகின.

மூதூரில் ஏற்பட்டுள்ள அத்தியாவ சியப் பொருள்களுக்கான தட்டுப் பாட்டை நீக்குவதற்காக இயந்திரப்படகு கள், மீனவர் படகுகள் மூலம் திரு மலை, கிண்ணியா பிரதேசங்களில் இருந்து பொருள்கள் கொண்டுவரப்படு கின்றன. அரச நிவாரணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அரசசார் பற்ற நிறுவனங்களினாலும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரண உதவி கள் வழங்கப்பட்டுவருகின்றன.

கடந்த 17 ஆம் திகதிமுதல் துண் டிக்கப்பட்டிருக்கும் மின்விநியோகம் இதுவரைக்கும் வழங்கப்படவில்லை. உள்ளூர், வெளியூர் அரச போக்கு வரத்துக்கள் எதுவும் இடம்பெறவில்லை. வங்கி தவிர்ந்த அரச அலுவலகங்கள் எதுவும் இயங்கவில்லை. கடந்த 21 ஆம் திகதிமுதல் இயங்கவேண்டிய முஸ்லிம் பாடசாலைகளும் திறக்கப் படவில்லை. உயர்தரப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இராணுவத்தின ரும் பொலிஸாரும் பாதுகாப்பு வழங் கியபோதும் சில மாணவர்கள் பரீட் சைக்குத் தோற்றவில்லை. மூதூர் கிழக்கு, மேற்கு, தெற்கு பகுதிகள் மற் றும் சம்பூர் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் இன்னும் மூதூர் நகரப்பகுதிக்கு வரவில்லை. (ஐ-3)

அரசியல் சூழ்நிலை - பாதுகாப்பு ஏற்பாடுகள்:

# எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியுடன் பலமணிநேரம் கலந்துரையாடல்

கொழும்பு,ஏப்.25

சமாதானப் பேச்சுக்களை தற்காலி கமாகப் புலிகள் இடைநிறுத்தியுள்ள ளதால் ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை மற்றும் நாட்டின் பாது காப்பு தொடர்பாக பிரதான எதிர்க் கட்சிகள் அனைத்தும் கூடி ஆராய்ந் திருக்கின்றன.

ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சரு மான லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை யில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினமிரவு ஜனாதிபதியைச் சந்தித்து, இந்த ஆராய்வை மேற்கொண்டன.

ஸ்ரீ.ல.சு.கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் பேரியல் அஷ்ரப் தலைமையில் நு.ஆ.புளொட் சார்பில் சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. சார்பில் டக்ளஸ் தேவானந்தா, நுவரெலியா மாவட்ட எம்.பி.எஸ்.சதா சிவம் ஆகியோரும் இந்தக் கலந்துரை யாடலில் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினமிரவு 7 மணிக்கு ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல் நள்ளிரவுவரை தொடர்ந்து நடை பெற்றது.

புலிகளின் இந்த அறிவித்தல் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எனவே, ஜனாதி பதி தன்னிடமுள்ள நிறைவேற்று அதி காரங்களைப் பயன்படுத்தி பாது காப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று கட்சிகள் வலியுறுத்தியதாக எஸ்.சதாசிவம் எம்.பி.கூறினார்.

(ஐ-3)

## 'லயன் எயார்' விமானப் பயணிகளுக்கு!

கொழும்பு,ஏப்.25

கொழும்புக்கும் - பலாலிக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'லயன் எயார்' விமான சேவையில் பய ணம் செய்ய பயணச்சீட்டுக் கொள்வனவு செய்பவர்கள் பயணத்தை ரத்துச் செய்தால் அறவிடப்படும் தண்டப் பணத்தை அந்நிறுவனம் குறைத்தி ருக்கிறது.

பயணச்சீட்டு கொள்வனவு செய் பவர்கள் பயண நேரத்துக்கு 24 மணி நேரத்துக்கு முன்னர் பயணத்தை ரத் துச் செய்தால் அவர்களுக்கு தண்டப பணம் ஏதும் அறவிடப்படமாட்டாது என்றும் -

பயணநேரத்துக்கு 24 மணிநேரத் துக்குள் பயணத்தை ரத்துச் செய் பவர்களிடம் ஆயிரம் ரூபா தண்டக் கட்டணம் அறவிடப்படும் என்றும் - அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

(ஐ-3)

## தமிழர்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைப் பாழடித்தது. சகல அரசாங் கங்களினதும் தவறே வடக்கு, கிழக் கைப் பாழடித்தது என்ற தொனியை பாலசிங்கத்தின் கடிதம் கொண்டி ருக்கிறது. அது நகைப்புக்கிடமானது.

பதவிக்கு வந்த இலங்கை அர சாங்கங்கள் பல தவறுகளைச் செய் தன என்பது உண்மை. ஆனால், குற் றம் [illegible] விடுதலை [illegible] பெருமளவு ஏற்புடையதாகும்.

எதிரிகளைக் கொன்றொழிப்பது, முஸ்லிம்களை அச்சுறுத்துவது, உரிய பிரதிநிதித்துவத் தகைமை இல்லாமல் வரி அறவிடுவது, கடல் புலிகளின் ஆக்ரோஷ நடவடிக்கை, சிறுவர்களைத் தொடர்ந்து சேர்த்தல் போன்றவை புலிகளின் நோக்கங்கள் குறித்து நம்பிக்கையை ஏற்படவைக்க உதவா.

நேர்மை அக்கறையுடன் கூடிய பேச்சு மூலமே இலங்கை இனப்பிரச் சனைக்குத் தீர்வு காணலாம் என்று நாம் தொடர்ந்து நம்புகிறோம். இந்த கோர யுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு இலங்கை எடுக்கும் முயற்சிகளுக்கு எங்களால் இயன்றவரை உதவுவ தற்கு நாம் தொடர்ந்து தயாராக உள ளோம் - இவ்வாறு அவர் கூறினார்.

# வளர்ப்பு நாய்களுக்கு இணுவிலில் இன்று தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.25

இணுவில் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அத்தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் மற்றும் நேரம் குறித்த விவரங்கள் வருமாறு:-

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் 9.30 மணிவரை பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி யில் உள்ள இணுவில் பொதுநூல கத்திலும் -

முற்பகல் 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரை தாவடி ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத்திலும்-

முற்பகல் 11மணிதொடக்கம் நண் பகல் 12 மணிவரை தாவடி தெற்கு பத்திரகாளி கோவிலடியிலும்-

மதியம் 12.15 மணிதொடக்கம் பிற் பகல் 1.15 மணிவரை தாவடி மத்திய சனசமூக நிலையத்திலும்-

பிற்பகல் 1.30 மணிதொடக்கம் 2.30 மணிவரை இணுவில், மானிப்பாய் வீதி, ஆலடிச்சந்தியிலும் -

பிற்பகல் 2.45 மணிதொடக்கம் 3.45 மணிவரை தாவடி ஆரம்ப சுகா தார நிலையத்திலும் -

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என இணுவில் சுகாதார பரிசோதகர் ப.சிவகுமார் அறிவித்துள் ளார்.

(ஒ-ரி)

# திருமலையில் அமைச்சர் ஹக்கீமுடன் பிரதமர் ரணில் நேற்றுமாலை பேச்சு

ஐக்கியதேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடை யிலான முறுகல்நிலை, மூதூர் சம்ப வங்கள ஆகியவை குறித்து பிரதமர் ரணிலுக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீ முக்கும் இடையே நேற்று பேச்சு நடை பெற்றது. இவர்களுக்கிடையிலான சந் திப்பில் அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் களுள் ஒருவரான அமைச்சர் நூர்தீன் மசூரும் கலந்துகொண்டார்.

திருகோணமலை கடற்படை தலை மையகத்தில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய வீரர்களுக்கான அடையா ளச் சின்னங்களை வழங்கும் வைபவம் நேற்றுமாலை நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வைபவத தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதமருடன், பாதுகாப்பு அமைச் சர் திலக்மாரப்பன, பொருளாதார மறு சீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் மிலிந்த மொறகொட, ஐ.தே.க.தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் நேற்று திருமலைக்கு விஜயம் செய்தனர். இந்தச் சந்தர்ப் பத்திலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீமுட னான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

அமைச்சர் ஹக்கீமுடன் திரு கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான நஜிமர் தௌபீக், எம்.எஸ்.[illegible] அன்வர் இஸ்மாயில், [illegible] ஆகியோரும் வந்திருந்தனர்.

(ஐ)

## ஆளுநரின் செயலாளர் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.25

வடக்கு - கிழக்கு மாகாண ஆளு நரின் செயலாளர் செ.அமிர்தலிங்கம் இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள் ளார்.

இன்று காலை வருகைதரும் இவர் காலை 9.30 மணிக்கு யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணி மனையில் வலயக் கல்விப் பணிப் பாளர்களையும் -

முற்பகல் 11.30 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணை யாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார்.(எ-5)

## கண்ணீர் அஞ்சலி



21.04.2003 அன்று லண்டனில் காலமான

திருமதி டெனி சிவசாயி (மஞ்சு)

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

கட்டைப்பிராய். (17204)

வேலும் மயிலும், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி டெனி சிவசாயி (மஞ்சு)

நல்லூர்,மூத்தவிநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டெனி சிவசாயி அவர்கள் 21.4.2003 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாயி மற்றும் துவாரகாதேவியின் (பேபி,U.K.)அன்பு மகளும் டெனியின்(U.K.) அன்பு மனைவியும் டெனிஷை னின் (U.K) அன்புத் தாயாரும் வினோத்,சாம்(U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அருளம்மாவின் பேர்த்தியும் மதி, பிறேம்குமார், காலஞ்சென்ற லதா ஆகியோரின் பெறாமகளும் திரு திருமதி எட்வின்(குவைத்), ஜெகன் - லலிதாம்பிகை (ஜெர்மன் போட்டோ), காலஞ்சென்ற மோகன் மற்றும் நாதன் - குகமாலா (இந்தியா), சிவா - சித்திரா (விஸ்வமடு), குகன் (U.K.), நேசன் (U.K.) ஆகியோரின் மருமகளும் பரணீதரன், பைரவி, ராகவி, டன்டி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25.04.2003) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (17203)

தகவல்: பேபி (தாய்) 00 44 1815049369 குகன் (மாமன்) 079 04020287

### சிவக்கொழுந்து ஐயாத்தம்பி

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது எட்டியாந் தோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து ஐயாத்தம்பி அவர்கள் 23.04.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் கிருஸ்ண லீலாவின் பாசமிகு தந்தையும் கண்ணன் (சுவிஸ்), பிரியதர்சினி (லண்டன்), ஐமுனா (லண்டன்), துவாரகதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2003) சனிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் இல.141, பரகல்ல றோட், எட்டியாந் தோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். பூதவுடல் எட்டியாந் தோட்டை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எழுதுமட்டுவாழ் தெற்கு (17202)

தகவல்: தி.கணேஸ் (பெறாமகன்)


## தவறிவிட்டது

டியீத்றல் டயறி (இலக்ரோனிக்) நல்லூருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வி.க.

மே/ப.உதயன்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2837

(17198)

## அறிவொளி NALLUR

BIO:T.ஜெயசீலன் B.Sc.

A/L-04: தொழிற்படும் விளக்க Tue., Thur. - 5p.m.

ஆரம்பம்: 26.04.2003 A/L-05 — மீறப்புரிமையியல் (Sat.-3p.m., Sun.-4p.m) உயிரிய பல்வகைமை (Mon.-5p.m., Sat.-4p.m., Sun.-3p.m.)

## இது உங்களுக்கு பொருத்தமானதா?

★ கணனி வரைப்செற்றிங் - நல்ல திறமை

★ பக்க வடிவமைப்பு - நல்ல அனுபவம் - தேர்ச்சி

★ கணனி அச்சுவேலைகள் தொடர்பான ஈடுபாடும் அனுபவமும்

இத்திறன்கள் உங்களிடம் இருந்தால்.....

★ சம்பளம் - திறமைக்கேற்றவாறு

★ சுமுகமான வேலைச்சூழல்

★ உடனே வேலை

நீங்கள் வேலை பெறப்போவது மிகவும் கௌரவமான நீண்டகால நிறுவனம்.

தொடர்பு : விளம்பர இலக்கம் : 1863

மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(552)

## நிறைஞ்சனாஸ்

விஜய், சிநேகா நடிக்கும்

வசீகரா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

JURASSIC PARK - 3

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல்

விஜயகாந், சிம்ரன், நூஷ்மா, விவேக் நடித்த

ரமணா

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்

சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த

அரசு

10.30, 2.30, 6.30, 9.30

## லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், சுரேஸ்கோபி, தேவயானி, அபிராமி செந்தில், கவுண்டமணி நடித்த

சமஸ்தானம்

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)

T.P.: 070 212223

# யுத்தநிறுத்தம் அமுலில் இருக்கின்றது; அதனால் வீதித்தடைகள் தேவையில்லை

## முரண்பாடுகள் களையப்பட்டு பேச்சு மீண்டும் தொடரும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு,ஏப்.25

யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றது. இதனால் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனை நடத்தத் தேவையில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றதென்பதை புலிகள் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு யுத்தநிறுத்தத்தைக் கைவிடுவதாக அறிவித்து விட்டு ஏப்ரல் 19 ஆம் திகதி திருமலை துறைமுகத்திலுள்ள இரண்டு கப்பல்கள்மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். ஆனால், இப்போது அந்த நிலை இல்லை.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதில் புலிகள் உறுதியாக உள்ளனர். யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரது நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சில விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு சில விடயங்களில் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. முரண்பாடுகளைக் களைந்து மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் நோர்வே மத்தியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இன்றும் நாளையும் நடக்கும் என நிச்சயிக்கப்பட்டிருந்த 'சிறான்' கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. இக்கூட்டம் பிறிதொரு தினத்தில் இடம்பெறும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், பேர்னாட் குணதிலகவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். இக்கடிதத்தில் இரண்டு விடயங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மீள் குடியமர்தல் குறித்து துரித கவனம் செலுத்தவேண்டும். மற்றது வடக்கு, கிழக்கில் 18 திட்டங்களுக்கு ஒஸ்லோ மாநாட்டில் வழங்க இணங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி இனங்காணப்பட்ட 18 திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

ஹோட்டல் சுபாஸ், ஹோட்டல் ஞானம்ஸ் உட்பட படையினர் தங்கியிருக்கும் 45 வீடுகளில் இருந்தும் படையினரை விலக்கிக்கொள்வதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், படையினருக்கு மாற்று இடங்கள் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. யாழ். குடாநாட்டிலிருந்து படையினரை விலக்கிக்கொள்ளும்படி புலிகள் ஒருபோதும் கேட்டதில்லை - இவ்வாறு அவர் கூறினார். (ஐ-3)

### நோய் காரணமாக போராளி உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஏப்.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகவீனம் காரணமாகப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் கோபு அல்லது சந்சீவகுமார் என்றழைக்கப்படும் 8 ஆம் வட்டாரம், துறைநீலாவணையைச் சேர்ந்த பெருமாள் ரஞ்சகுமார் என்ற போராளியே சாவடைந்துள்ளதாக 'புலிகளின்குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (ஐ-12)

### அப்பர் சுவாமிகள் குரு பூசை நிகழ்வுகள்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் சனிக்கிழமை காலை 8.30மணியளவில் மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நல்லூர் ஸ்ரீசட்டநாத சுவாமி ஆலயத்திலும் நல்லூர் ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்திலும் அப்பர்சுவாமிகள் குருபூசை விழாவை கொண்டாடவுள்ளது. (ஓ)

# உணவுப் பொருள்களுக்காக வேலை திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.25

உலக உணவுத் திட்டத்தின் 'உணவுப் பொருள்களுக்காக வேலை செய்யும்' திட்டம் யாழ்.குடாநாட்டில் இந்த ஆண்டில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதன்படி குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட குளங்கள், வாய்க்கால்கள், ஆறுகள் என்பன அந்தந்தப்பகுதி மக்களைக் கொண்டு புனரமைக்கப்படவுள்ளன. இந்த மக்களுக்கு சம்பளப் பணத்துக்குப் பதிலாக அரிசி, மா, சீனி போன்ற உணவுப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த 1970ஆம், 1980ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 'சிரமதானம்' என்ற பெயரில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் இந்த நடைமுறை இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-11)

# சரசாலை – மந்துவில் இடையே சட்ட விரோத மண் அகழ்வு

தென்மராட்சி,ஏப்.25

சரசாலைக்கும் மந்துவிலுக்கும் இடையே உள்ள வயல் பகுதிகளில் தினமும் இரவு வேளைகளில் சட்ட விரோதமாக மண் அகழப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் இரவு எட்டுமணி தொடக்கம் அதிகாலை நான்கு மணிவரை சரசாலை ஸ்ரீகணேசன் வித்தியாலயத்திற்கு அருகே உள்ள வீதியூடாக மண் ஏற்றப்பட்ட வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் செல்வதாக கூறப்படுகிறது.

மணல் ஏற்றிச்செல்வது அண்மையில் தடைசெய்யப்பட்டதை அடுத்து இரவு வேளைகளில் வயல் நிலங்களில் திருட்டுத்தனமாக மண் அகழப்படுவதாகவும் -

இதனால் இவ்வருடம் இவ் வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாமல் போகலாமெனவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஓ-117)

### சேக்கிழார் விழா

யாழ்ப்பாணம்,ஏப்.25

அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடத்தும் சேக்கிழார் பெருவிழா, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரட்டையர்புலம் ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 1 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை சேக்கிழார் மன்றத் தலைவர் ச.கா. சபாநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒரி)

# முஸ்லிம்கள் இருவரை வானில் கடத்த முயற்சி

## மட்டக்களப்பு காங்கேயன் ஓடையில்

மட்டக்களப்பு,ஏப்.25

மட்டக்களப்பு மாவட்டத்தின் காங்கேயன் ஓடையில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் முஸ்லிம்கள் இருவரைக் கடத்திச் செல்ல முயன்றுள்ளனர்.

வீதியால் சென்று கொண்டிருந்த இரு முஸ்லிம்களையே வானில் வந்த இருவர் கடத்திச் செல்ல முயன்றனர் எனக் கூறப்படுகிறது.

அவ்வேளை, அவர்கள் கூச்சலிடவே அயலவர்கள் அங்கு விரைந்து வந்ததால் வானில் வந்தவர்கள் தப்பிச சென்றுவிட்டனர். (ஐ-12)

### அம்பாறையில் ஷெல் வீச்சு!

அம்பாறை தம்பிட்டி சிறப்புஅதிரடிப்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு முகாமைச் சூழ உள்ள பகுதிகள் மீது எறிகணைகள் வீசப்பட்டன என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் பெரும் பதற்றத்திற்குள்ளாகியுள்ளனர் என்றும் - போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் இச்செயல் மிகவும் பாரதூரமானது எனவே மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களின் ஆயுதப்படை ... கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு ... - தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

# உணவு விடுதி, புளொட் அலுவலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நடந்து சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் வேம்படி வீதியில் உள்ள புளொட் அலுவலகம் மீது கிரனேட் வீசப்பட்டிருக்கிறது. வேம்படி வீதியூடாக வந்த ... ஒன்றிலிருந்தே தமது அலுவலகம்மீது கிரனேட் வீசப்பட்டது என்று புளொட் அமைப்பு தெரிவித்திருக்கிறது.

இது குறித்து உடனடியாகப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. படையினரும் ... விரைந்து வந்து விசாரணைகளை ...

புளொட் அலுவலகம் நோக்கி வீசப்பட்ட கிரனேட்டில் மற்றொரு தமிழ்க் குழுவின் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன. ... 'எம்-75' ... என்றும் ... வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் அலுவலகத்தில் வீசப்பட்ட கிரனேட் வெடிக்கக்கூடிய நிலையில் காணப்பட்டதால் அதனை இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் நேற்று நள்ளிரவு அந்த இடத்தில் வைத்தே வெடிக்க வைத்தனர்.

இந்தச் சம்பவங்களால் அந்தப் பகுதியில் நேற்றிரவு பதற்றம் ஏற்பட்டது.

இந்த கிரனேட் வீச்சுச் சம்பவங்கள் பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு உடனடியாகவே முறையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-12)

# புலிகளுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது இதுகுறித்து நான் அப்பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளருடன் தொலைபேசியில் வினவினேன்.

இந்தியாவிலுள்ள வாராந்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் யுத்தகளநிருபரால் அச்செய்திகள் வழங்கப்பட்டனவென என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இன்றினால் ஆட்டம்காணாது அப்பொய்ப்பிரசாரங்களை வெற்றிகொள்வதையே நாம் செய்யவேண்டும் - இவ்வாறு பிரதமர் கூறினார். (ஐ)

### கொழும்பில் பிக்குமார் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.25

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் முன்பாகக் கூடிய நூற்றுக் கணக்கான பிக்குகள் நோர்வேயின் மத்தியஸ்தத்தை எதிர்த்தும், கண்காணிப்புக் குழுவினர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனக் கோரியும் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாக அவர்கள் கோஷமிட்டனர். (ஐ-12)

# பேச்சுக்களைத் தொடருங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை பேச்சினை புலிகள் தரப்பினர் இடைநிறுத்தி இருப்பது ஓர் அவல அறிவிப்பாகும்.

அரசின்போக்கில் அதிருப்தியுற்று - இதுவரை இணங்கிக் கண்டவற்றை அமுலாக்கத் தவறியமை - இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் தாமதம் காட்டியமை - வொஷிங்டன் கூட்டத்துக்கு அழைக்காமல் விட்டமை ... பல காரணங்களைக் காட்டி சமாதான பேச்சுக்களைப் புலிகள் இடைநிறுத்தி ... சமாதானத்தை ... இந்த மக்கள் ... குழப்பத்தினையும், வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பேச்சு ஒரு இருவழி ... இருதரப்பினரும் ... தியோடு தமிழ் மக்களினது விடிச்சியான எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு பேச்சுக்களை நடத்தவேண்டும். பேசுபவற்றை இருதரப்பினரும் உடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும். செயற்பாடின்றி தொடர்ந்து பேசிக்கொண்டு இருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓர் ஆண்டு கடந்த பின்னரும் ... ஏற்படாமல் இருப்பது தமிழ் மக்கள் மனதுகளில் ஏற்கனவே விசனத்தை ... பேச்சின் ... நம்பிக்கையில்லாத் தன்மையையே ஏற்படுத்தியுள்ளது. இது இறுதியில் பேச்சில் ஈடுபட்ட இருதரப்பினருக்கும் இடையில் ஐயப்பாட்டையும் நம்பிக்கையில்லாத் தன்மையையுமே தோற்றுவிக்கும்.

இந்நிலையில் யுத்தம் இனிமேல் எமக்கு வேண்டாம், பேசுவதைச் செயற்படுத்துங்கள், பேச்சைத் தொடருங்கள் என்று வேண்டுகோளை அரசுக்கும் புலிகளுக்கும் இவ்வேளையில் அவசரமாக தமிழ் மக்கள் அனைவர் சார்பிலும் விடுக்க விரும்புகின்றோம்.

இவ்வாறு அமரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# இவ்வார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், புலிகளின் கூட்டம் ... யைத் தீர்மானிக்கும் விடயம் குறித்து அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்கள் எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது - என்றார். (ஐ)


உங்களுக்காக.......

மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு



இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா

அவர்கள் வருகை தந்துள்ளார்!



✻ கைரேகை ✻ ஜாதகம்

✻ தொழில் முன்னேற்றம்

✻ திருமணத்தடை

✻ கல்வியால் பிரச்சினை

✻ தீராத வியாதிகள்

எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஏற்ற வகையில் தீர்வுக்கு

ஒரு முறை விரையுங்கள் உண்மை புரியும்

சந்திக்கும் இடம்:-

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மடோனா லொட்ஜ்

ஸ்ரீமுருகன் ஜுவல்லரி / சிங்கள் அபார் அருகில்

யாழ்ப்பாணம்.

(17102)

ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி.

A/L 2005

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 26.04.2003 (சனி)

வர்த்தகப் பிரிவு - காலை 7.00

கலைப் பிரிவு - காலை 3.00

கணிதப் பிரிவு - காலை 11.00

(17201)

கணக்கீடு

A/L 2004

பங்குடமை

ஆரம்பம் நாளை 3.00 p.m.(26.04)

A/L 2005

புதிய பிரிவு

நாளை 6.30 a.m.(26.04)

A/L 2005

கா.சே.டு

நாளை 2.00 p.m.(26.04)

ஆசிரியர்: S.தவா

B.Com. (Hons) (Acc.Spl.)

NEW SCIENCE COLLEGE

JAFFNA.

(17200)

CHEMISTRY CENTRE

83, பலாலி வீதி, கந்தர்மடம்.

A/L 2005

Mechanics

இன்றே ஆரம்பம்:

Mon., Fri. 4 p.m.

By:- கருணாநிதி

Bio. - Mon., Fri. 5-6 p.m.

திரு.தற்பரன்

Maths - Mon., Fri. 5-6 p.m.

திரு.பிரதீபன்

CHE - Mon., Fri. 3-4 p.m.

திரு.அன்பழகன்

திரு.வர்ணன் அவர்களின் பௌதிகவியல் வகுப்புகள் உடன் ஆரம்பம்.

விக்னா

கல்வி நிறுவனம்

A/L கலைப்பிரிவு

2004, 2005

சனி, ஞாயிறு

பொருளியல்

திரு. விக்கி 10-11, 11-12

அளவையியல்

திரு. சயந்தன் 8-9, 9-10

தமிழ்

திரு. குழந்தை பிரிவு I 7-8, 10-11

திரு. லிங்கம் பிரிவு II 10-11, 11-12

இந்துநாகரிகம்

திரு. பத்மராஜா 8-9, 9-10

கிறிஸ்தவம்

திரு. வசந்தன் 7-8, 8-9

புவியியல்

திரு. பாபு 11-12, 7-8

வரலாறு

திரு. சுதன் 10-11, 11-12

அரசியல்

திரு. ஸ்ரீரங்கநாத் 12-1, 1-2

நாடகமும் அரங்கியலும்

திரு. மதி 11-12, 12-1

(17199)

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்

பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(17083)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.